# 1. பொருளாதாரச் செயலாற்றல், பிரச்சினைகள், கொள்கைகள் — 1970

## (அ) பொருளாதாரச் செயலாக்கம்

### (1) தேசிய உற்பத்தி

1970ல் மொத்தத் தேசிய உற்பத்தி நிலையான விலைகளின்படி ரூ. 93,160 இலட்சத்திலிருந்து ரூ. 96,950 இலட்சத்துக்கு அதிகரித்தது. 1970ல் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு 4.1 சதவீதமாகும். ஒப்புநோக்கும்போது சென்ற ஆண்டின் அதிகரிப்பு 5.1 சதவீதமாகவிருந்தது. இவ்வதிகரிப்பு 1960-1969 பத்தாண்டுக் காலப் பகுதியில் நிலவி வந்த சராசரி அதிகரிப்பாகிய 4.5 சதவீதத்தைவிடக் குறைவாகவிருந்தாலும், 1960-1967 காலப் பகுதியின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பாகிய 3.9 சதவீதத்தைவிட அதிகமாக விருந்தது. 1960—1969 பத்தாண்டுக் காலப் பகுதியிற் காணப்பட்ட உயர்ந்த சராசரி வீதம் 1968ல் கிடைக்கப்பெற்ற உயர்ந்த வளர்ச்சியினுலாகும். 1970ன் 2.1 சதவீத மக்கள் தொகை அதிகரிப்பிற்கு இடமளிப்பின் தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு 2.0 சதவீதமாகும். தனியாளுக்கான உற்பத்தி 1969ன் ரூ. 760 இலிருந்து 1970ல் ரூ. 775க்கு அதிகரித்துள்ளது.

முந்திய ஆண்டிலும் பார்க்கக் குறைவாகவிருந்த மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பினை நோக்கும்போது இவ்வாண்டின் நடுப்பகுதியில் அரசாங்கத்தினுற் கொண்டுவரப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு முக்கியமாக இறக்குமதிகளையும் தனியார் துறைக் கைத்தொழில்களையும் செம்மையுறச் செய்யும் கொள்கைகளுக்கு இடமளிக்கும் முறையிற் பொருளாதார அமைப்பிற் கொண்டுவரப்பட்ட பொதுச் சீரமைப்புகளைக் கணக்கிலெடுக்க வேண்டும். இக்கொள்கைகள், தொழிற்பாட்டு அளவுகளை ஓரளவு பாதித்திருப்பதால் 1968, 1969ஆம் ஆண்டு வளர்ச்சிகளை 1970ஆம் ஆண்டின் வளர்ச்சியுடன் ஒப்பிடுதல் முறையாக அமையாது. முந்திய ஈராண்டுகளிலும் ஏற்பட்ட நிலையான வளர்ச்சி முக்கியமாக கைத்தொழில், போக்குவரத்துத் தொடர்புகள், கட்டடவாக்கம் ஆகிய முயற்சிகளுக்குக் கிடைக்கப்பெற்ற பரந்த உள்ளிடுகைப் பொருட்களினுலேயே பெறமுடிந்தது. பொது உத்தரவுச் சீட்டுக்கள் நீக்கப்பட்டமை பல பரந்த பொருட்களின் கிடைப்பனவைப் பாதித்தன. முந்திய காலப் பகுதியிலே திரட்டப்பட்ட கையிருப்புக்கள் கிடைக்கப்பெற்றமையால் 1968, 1969ஆம் ஆண்டுகளின் வளர்ச்சி மட்டத்தை 1970ஆம் ஆண்டிலும் ஓரளவு காலப் பகுதிக்கு நிலைநாட்ட முடிந்தது. ஆனுல் இவ்வாண்டின் கடைப் பகுதியில் இக்கையிருப்புக்கள் முடிந்துபோக மீளநிரப்பல் இன்றியமையாத தேவையாயிற்று.

நிலையான விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியிலேற்பட்ட துறை வகைப்படியான அதிகரிப்பு அட்டவணை 1 — 1இற் றரப்பட்டுள்ளது. சுரங்கத் தொழில் பார்குழித் தொழில் கட்டவாக்கம் மின்சாரம், வாயு ஆகிய பெரிய துறைகளே இவ்வாண்டில் மெச்சத்தக்க அதிகரிப்புக்களைக் காட்டின. 1970ல் இத்துறைகளின் ஒவ்வொரு பிரிவுகளிலும் 15 சதவீத அதிகரிப்புக்கு மேல் பெறப்பட்டிருக்க, போக்குவரத்து மொத்தச் சில்லறை வர்த்தகம் தவிர்ந்த ஏனைய எல்லாத் துறைகளும் 3 சதவீத அதிகரிப்புக்களுக்கு மேலானவற்றைக் காட்டின. ஒரு துறையேனும் மொத்த வீழ்ச்சிகளைக் காட்டவில்லை.

விவசாயப் பயிர்களைப் பொறுத்தவரையில் நெல்லுற்பத்தி 768 இலட்சம் புசல்களுக்கு 16.5 சதவீதத்தால் அதிகரித்தது இதனுல் வளர்ச்சி வீதம் 1969ன் 0.9 சதவீதத்திலிருந்து 1970ல் 3.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

இவ்வதிகரிப்பு, தேயிலை உற்பத்தி வீழ்ச்சியை ஓரளவுக்கு ஈடுசெய்தது. தேயிலை உற்பத்தி 1970ல் 4,680 இலட்சம் இருத்தல்களாகவிருந்தபோது அது 1962ல் பெறப்பட்ட உற்பத்தியைவிட ஒரு சிறிதளவே அதிகமாகவிருந்தது. இது தேயிலை உற்பத்தியின் நியாயமானளவு கூரிய வீழ்ச்சியைக் காட்டுகின்றது. தெங்கு உற்பத்தி 24,470 இலட்சம் தேங்காய்களாகவிருந்தபோது 1969ன் உற்பத்தியைவிட அதிகமாகக் காணப்பட்டபோதும், அது 1966ல் பெறப்பட்ட உற்பத்தியை விடக் குறைவாகக் காணப்பட்டது. இரப்பர் உற்பத்தி 3,330 இலட்சம் இருத்தல்களிலிருந்து 3,510 இலட்சம் இருத்தல்களுக்கு அதிகரித்தது. தேயிலையும் தெங்கும் வெளிநாட்டுச் செலாவணியை வழங்கும் முக்கிய பொருட்களாதலால் இவ்விரு உற்பத்திகளையும் அதிகரிப்பதற்குத் தளராத முயற்சி எடுக்கவேண்டியேற்படும்.

### அட்டவணை I—1

### துறைசார்ந்த வளர்ச்சி — 1970ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி

*(நிலையான விலைகளில்)*

| | | 1969 (ப. இ. ரூ.) | 1970 (ப. இ. ரூ.) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. | விவசாயமும் வனவியலும் வேட்டையாடுதலும், கடற்றொழிலும் ... | 3,276.4 | 3,395.2 | + 3.6 |
| 2. | சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும் ... | 55.0 | 65.2 | +18.5 |
| 3. | தயாரிப்புகள் ... ... ... ... ... | 1,260.5 | 1,334.9 | + 5.9 |
| 4. | கட்டடவாக்கம்... ... ... ... ... | 519.5 | 598.2 | +15.1 |
| 5. | மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... ... | 17.6 | 21.3 | +21.0 |
| 6. | போக்குவரத்தும், களஞ்சியப்படுத்துதலும், செய்தியறிவிப்பும் ... | 899.1 | 912.5 | + 1.5 |
| 7. | மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் ... ... | 1,366.7 | 1,391.4 | + 1.8 |
| 8. | வங்கித் தொழிலும், சாப்புறுதியும், அசைவற்ற ஆதனமும் ... | 113.7 | 118.0 | + 3.8 |
| 9. | குடியிருப்புக்களின் உடைமைகள் ... ... ... | 290.9 | 301.5 | + 3.6 |
| 10. | பொது நிருவாகமும பாதுகாப்பும் ... ... ... | 445.4 | 458.8 | + 3.0 |
| 11. | பணிகள் ... ... ... ... ... | 1,138.9 | 1,183.7 | + 3.9 |

1970ல் தனியார் துறையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1969ன் ரூ. 17,480 இலட்சத்திலிருந்து 1970இல் ரூ. 17,070 இலட்சத்துக்கு வீழ்ச்சியுற்றது. 1970ல் முதலீட்டத்திலேற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக முதலீட்ட நடுத்தரப் பொருட்களின் இறக்குமதிகளிலேற்பட்ட வீழ்ச்சியினாலாகும். 1970ல் அரசாங்கத் துறையின் முதலீட்டம் ரூ. 5,050 இலட்சத்திலிருந்து ரூ 7,850 இலட்சத்துக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பு அரசாங்கத்திடமிருந்த அரிசியின் கையிருப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. மொத்த உள்நாட்டுச் செலவில் மூலதனவாக்கத்தின், பங்கு 1969ன் 18.6 சதவீதத்திலிருந்து 1970ல் 19.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த உள்நாட்டுச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட ரூ. 4,530 இலட்சத்தால் அதிகரித்தது. இக்குறை வெளிநாட்டு உதவியின் மூலமும் ஒதுக்குகளைப் பயன்படுத்துவதன் மூலமும் நிதியீட்டப்பட்டது.

## (2) நிதி நாணய அபிவிருத்திகள்

*(அ) அரசாங்க நிதி*

*தற்காலிகத் தரவின்படி 1969/70ல் வருமானச் சேகரிப்புக்கள் ரூ. 27,360 இலட்சமாகவும் தேறிய செலவு உச்ச எல்லையாக ரூ. 36,720 இலட்சமாகவும் விளங்கி ரூ. 9,360 இலட்சங்கொண்ட பணக் குறையை உண்டுபண்ணிற்று. 1969/70ல் ஏற்பட்ட பணக் குறைவு இதுவரை ஏற்பட்டதைவிட மிகக் கூடியதாகும். இக்குறைவு வெளிநாட்டுத் துறையிலிருந்து பெறப்பட்ட ரூ. 2,200 இலட்சத்தின் மூலமும் வங்கியல்லா உள்நாட்டுத் துறையிலிருந்து பெறப்பட்ட ரூ. 4,540 இலட்சத்தின் மூலமும் நிதியீட்டப்பட்டது. இவ்வாறு திரட்டப்பட்ட வளங்கள் தேவையினைவிட அதிகரித்துக் காணப்பட்டதால் பண நிலுவைகள் ரூ. 260 இலட்சத்தால் அதிகரித்தன. 1969/70ல் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளிலிருந்து ஏற்பட்ட தேறிய விரிவு ரூ. 4,280 இலட்சமெனக் கணிக்கப்பட்டுள்ளது. (1969/70ல் நிதியாண்டுத் தொடக்கத்தில் வெளிநின்ற ரூ. 920 இலட்சங்கொண்ட அரசாங்க உணவு இறக்குமதி உண்டியல்களை மீட்பதற்காகச் சீராக்கஞ் செய்யப்படின் இத்தொகை ரூ. 3,360 இலட்சமாகும்). 1969/70ல் அரசாங்க வரவுசெலவுத் திட்டங்களினுலேற்பட்ட நாணய விரிவு எந்தவோர் ஆண்டிலும்பார்க்க மிகக்கூடியதாகும்.*

*1969/70ல் அரசாங்கத்தின் வருமானச் சேகரிப்பு ரூ. 2,390 இலட்சத்தால் அதிகரித்தது. பெற்றேலியக் கூட்டுத்தாபனத்தின்மீது விதிக்கப்பட்ட மொத்த விற்பனை வரியும், மொத்த விற்பனை வரியிலிருந்து சிகரட்டுக்கு அளிக்கப்பட்ட விலக்கினை நீக்கியமையும், தயாரிப்புக் கைத்தொழில்களினது மொத்த விற்பனை வரிமீது கொண்டுவரப்பட்ட சில மாற்றங்களும் இவற்றிலிருந்தான வருமானத்தை ரூ. 1,360 இலட்சத்தால் அதிகரிக்கச் செய்தன. வெ. செ. உ. சா. வருமானத்திலேற்பட்ட ரூ. 1,610 இலட்சங்கொண்ட கூரிய அதிகரிப்பு, அரசாங்கத் திணைக்களங்களின் ஏறக்குறைய முழு இறக்குமதிகளையும் வெ. செ உ. சா. திட்டத்தின் கீழ்க் கொண்டுவருவதென்ற முடிவினுலாகும். இது 1970 மேயில் பொது உத்தரவுச் சீட்டுத் திட்டத்தை நீக்கல் செய்ததனுலேற்பட்ட வெ. செ. உ. சா. இழப்பை மேலதிகமாக ஈடு செய்தது. வருமான வரியிலிருந்து பெற்ற அதிகரித்த வருவாயாகிய ரூ. 980 இலட்சம், கூட்டுத்தாபனங்களிலிருந்தும் தனியார் தொழில் நிலையங்களிலிருந்தும் பெறவேண்டிய வரிகளை முற்கூட்டியே சேகரிப்புச் செய்ததனுலாகும். இறக்குமதித் தீர்வைகளிலேற்பட்ட ரூ. 1,540 இலட்சங்கொண்ட வீழ்ச்சி 1969/70 வரவுசெலவுத் திட்டத்தில் செம்மையற்ற அடிப்படை எண்ணெய்கள் மீதான இறக்குமதித் தீர்வையை நீக்கியமையினுலாகும். மின்சாரத் திணைக்களத்தின் வருமான இழப்பு, அத்திணைக்களம் அரசாங்கக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதன் விளைவால் அதன் நடவடிக்கைகள் அரசாங்கக் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டமையினுலாகும்.*

*1969/70ல் அரசாங்கத்தின் முழுமையான தேறிய செலவு 12 சதவீதத்தால் அல்லது ரூ. 3,870 இலட்சத்தால் அதிகரித்தது. இது மீண்டெழும் வாக்குகளின் கீழான ரூ. 2,750 இலட்சம் அல்லது 12 சதவீத அதிகரிப்பையும் இதனை ஈடுசெய்யும் வகையில் அமைந்து மூலதனவாக்குகளின் கீழான ரூ. 400 இலட்சம் அல்லது 5 சதவீத செலவு வீழ்ச்சியையும், முற் பணக் கணக்குக் கொடுப்பனவுகளின் ரூ. 1,520 இலட்சங்கொண்ட அதிகரிப்பையும் கொண்டுள்ளது. பொருளாதார தொழிற்பாட்டு அடிப்படையில் மீண்டெழுஞ் செலவு ரூ. 2,380 இலட்சம் அல்லது 9 சதவீத அதிகரிப்பைக் காட்டியிருக்க, மூலதனச் செலவு ரூ. 270 இலட்சத்தால் அல்லது 3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றுள்ளது.*

*அரசாங்கத் திணைக்களங்களின் ஏறக்குறைய முழு இறக்குமதிகளையும் வெ. செ. உ. சா. திட்டத்தின் கீழ்க் கொண்டுவருவதென்ற முடிவும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பும், நடைமுறைச் செலவை*

அதிகரிக்கச் செய்தன. மறுபக்கத்தில் மின்சாரத் திணைக்களம் மாற்றியமைக் கப்பட்டமை வர்த்தக முயற்சிகளின் மொத்தக் கொடுப்பனவுகளிற் கணிச மானளவு வீழ்ச்சியைக் கொண்டுவந்தது.

மாற்றற் கொடுப்பனவுகள் மொத்த உணவு மானியத்தையும், பொதுப் படுகடன் இளைப்பாறற் சம்பளங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும். 1969/70ல் மாற்றற் கொடுப்பனவுகளினதும் கல்வி, நலத் துறை போன்ற சமூக நலத்திட்டங்களினதும் வளர்ச்சி வீதம் முறையே 7 சதவீதம் 14 சதவீதமாகவிருந்தது. ஒப்பிட்டு நோக்கும்போது 1970இல் மக்கள் தொகை வளர்ச்சி 2.1 சதவீதமாகவும் மொத்தத் தேசிய உற்பத்தி யின் வளர்ச்சி 4.1 சதவீதமாகவும் இருந்தது. வருமானம் 1968/69ல் 16 சதவீதத்தாலும், 1967/68, 1969/70ல் 10 சதவீதத்தாலும் அதிகரித்து வந் திருக்க நடைமுறைச் செலவு 1967/68ல் 14 சதவீதத்தாலும் 1968/69, 1969/70ல் 9 சதவீதத்தாலுமீ அதிகரித்துள்ளது.

1969/70ல் ரூ. 8,830 இலட்சமாகவிருந்த மூலதனச் செலவு முந்திய ஆண்டின் ரூ. 9.100 இலட்சங்கொண்ட மூலதனச் செலவைவிடக் குறைவாக விருந்தது. இக்குறைவு, 1969 நவெம்பரில் மின்சாரத் திணைக்களம் அரசாங் கக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதன் விளைவால் அதன் மூலதனச் செலவு அரசாங்கக் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டதனாலாகும்.

1969/70ன் வரவுசெலவுத்திட்டத்தில் ரூ. 7,220 இலட்சங்கொண்ட பணக்குறை எதிர்பார்க்கப்பட்டபோதும், தற்காலிக எண்தொகை ரூ 9,360 இலட்சங்கொண்ட பணக் குறையைக் காட்டுகின்றது. பணக் குறையிலேற் பட்ட அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திலேற்பட்ட குறைவினு லாகும். இக்குறைவு மீண்டெழும், மூலதனச் செலவுகளின் குறைவினுலும், வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படாத முற்பணக் கணக்குகளின் கீழ்ச் செய்யப்பட்ட ரூ. 2,010 இலட்சக் கொடுப்பனவினுலும் ஓரளவு ஈடு செய்யப்பட்டது. வெளிநாட்டுத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வளங் கள் ரூ. 1,420 இலட்ச வீழ்ச்சி ஏற்பட்டதாலும் வங்கியல்லா உள்நாட்டுத் துறையின் வளங்களில் ரூ 150 இலட்ச வீழ்ச்சி ஏற்பட்டதாலும் அரசாங்கத் தின் நிதி வளப் பிரச்சினை மேலும் சீர்கேடடைந்தது. இதனை நிவர்த்தி செய்வதற்கு ரூ. 4,540 இலட்சங்கொண்ட தொகையை அரசாங்கம் வங்கி களிலிருந்து பெறவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது.

### அட்டவணை I—2

### 1969/70இல் தேறிய பணக்குறையின் நிதியீட்டம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலம் | மூலம் (எதிர்பார்க்கப் பட்டது) | உண்மையான (தற்காலி கமாக) | மிகை அல்லது குறை (-) |
|---|---|---|---|
| 1. வெளிநாட்டு நிதி (பண்டத் திட்ட உதவி) ... ... | 362 | 220 | - 142 |
| 2. உள்ளூர்க் கடன்கள் | | | |
| (அ) வங்கியல்லா மூலங்களிலிருந்தான சந்தைக் கடன்பாடு... | 281 | 266 | - 15 |
| (ஆ) சந்தையல்லாக கடன்பாடு ... ... ... | — | 22 | + 22 |
| 3. மொத்தம் (12) ... .. ... ... | 643 | 508 | - 135 |
| 4. தேறிய பணக் குறை .. ... ... ... | 722 | 936 | + 214 |
| 5. தேறிய விரிவுத் தாக்க நிதியீட்டம் (4-3) ... ... | 80 | 428 | 348 |

1965/66 — 1969/70ஆம் ஆண்டுகளில் பணக்குறையின் நிதியீட்டமும், இந்நிதியீட்டத்தின் விரிவுத்தாக்க மதிப்பீடு பற்றிய தரவுகளும் அட்டவணை 1—3உற்றரப்பட்டுள்ளன.

## அட்டவணை I—3

## பணக்குறையின் நிதியீட்டம் 1965/66 — 1969/70

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலம் | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 (தற்காலிக மானவை) |
|---|---|---|---|---|---|
| 1. வங்கியல்லா மூலங்களிலிருந்தான மொத்த நிதியீட்டம் ... ... | 486.1 | 577.9 | 448.3 | 608.3 | 508.0 |
| (அ) உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு | 112.2 | 72.3 | 9 8 | 52.2 | 21.8 |
| (ஆ) வங்கியல்லா மூலங்களிலிருந்தான உள்நாட்டுக் கடன்பாடு ... | 255.9 | 297.0 | 248.3 | 202.5 | 266.0 |
| (இ) வெளிநாட்டுக் கடன்களும் கொடைகளும் ... ... ... | 118.0 | 208.6 | 190-2 | 353.6 | 220.2 |
| 2. வங்கித் துறையிலிருந்தான உள்நாட்டுக் கடன்பாடு ... ... ... | 162.3 | 51.3 | 303 5 | 68.1 | 453.5 |
| 3. அரசாங்கப் பண நிலுவைகளினதும் பொருள் உதவி இணைக்கிணை நிதிகளினதும் பயன்பாடு... ... .. | – 82.4 | – 22.4 | – 36.1 | 111.2 | – 25 6 |
| (அ) பண நிலுவைகள் ... ... | – 47.2 | 21.5 | – 48.4 | 62.9 | – 30.6 |
| (ஆ) வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதிகள் .. .. | – 35.2 | – 43.9 | 12.3 | 48.3 | 5.0 |
| 4. மொத்தத் தேறிய பணக் குறை ... | 566.0 | 606.8 | 715.7 | 787.5 | 935.6 |
| 5. ஐ. அ. உதவி இணைக்கிணை நிதிகளின் மாற்றத்துக்கான சீராக்கம் .. ... | 42.5 | 27.2 | — | – 0.3 | ... |
| 6. அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத் தாக்கம் ... | 122.4 | 56.1 | 267.4 | 179.0 | 427.9 |

குறையை நிதியீட்டுவதற்காக வெளிநாட்டுத் துறையிலிருந்து பெறப்பட்ட ரூ. 2,200 இலட்சத்தில் ரூ. 1,830 இலட்சம் பண்டக் கடன்களாகவும் ரூ. 570 இலட்சம் கொடைகளாகவும் பெறப்பட்டன. இவை திட்டக் கடன்களின் கீழ்ச் செய்யப்பட்ட ரூ. 190 இலட்சங்கொண்ட மீளக் கொடுப்பனவினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டன. திட்டக் கடன்களினது தேறிய மீளக் கொடுப்பனவின் அதிகரிப்பு முந்திய ஆண்டுகளில் அரசாங்கத்தின் நிதி வளப் பிரச்சினையைக் கணிசமானளவில் தணித்துவந்த வெளிநாட்டுக் கடன்பாடு தற்போது அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்திற் சிக்கலை உண்டுபண்ணுகின்றதென்பதைக் காட்டுகின்றது. கொடைகளாகப் பெற்ற தொகை ரூ 570 இலட்சத்தை அடைந்திருக்க 1969/70ல் பண்டக் கடன்கள் வடிவிற் பெறப்பட்ட தொகை முந்திய ஆண்டினைவிடக் கணிசமானளவு குறைவாகவிருந்தது. 1968/69ல் 45 சதவீதத் தேறிய பணக்குறையை நிதியீட்டிய வெளிநாட்டு உதவி 1969/70ல் 23 சதவீதத்தையே நிதியீட்ட உதவியது.

1970/71ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் ரூ. 28,780 இலட்சத்தை மொத்த வருவாயாக எதிர்பார்த்திருக்கும் வேளையில் ரூ. 38,090 இலட்சம் தேறிய மொத்தச் செலவுக்கு இடமளித்துள்ளது. ரூ. 9,310 இலட்சம் கொண்ட பணக்குறை உள்ளூர் கடன்பாட்டின்மூலம் பெறப்படவிருக்கும் ரூ. 4,400 இலட்சத்தாலும், வெளிநாட்டு உதவியின்மூலம் பெறப்படவிருக்கும் ரூ. 4,910 இலட்சத்தாலும் நிதியீட்டப்படவிருக்கின்றது. வரவுசெலவுத் திட்டத்தின் விரிவுத்தாக்கம் ரூ. 970 இலட்சமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### (ஆ) பணமும் கொடுகடனும்

1970இல் பணநிரம்பல் ரூ. 830 இலட்சத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. இது முந்திய ஆண்டினைவிட சராசரியாக 4 சதவீதம் உயர்ந்ததாகும். எனினும், இச்சராசரி முதற் பத்து மாதங்களில் நிலவிய 9.8 சதவீத விரைவினைப் பிரதிபலிப்பதாக அமையவில்லை. முதற் பத்து மாதங்களிலேற்பட்ட பண விரிவு 1970 ஒற்றோபரிற் கையாண்ட நாணயப் பெறுமதி நீக்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்டதுமன்றி மாற்றப்பட்டுமுள்ளது. நவம்பரில் பண நிரம்பலிலேற்பட்ட வீழ்ச்சி ரூ. 1,400 இலட்சமாகும். நாணய மதிப்பு நீக்கத்தினாற் கொணரப்பட்ட சுருக்கம் திசெம்பரில் மீண்டும் பண நிரம்பலிலேற்பட்ட ரூ. 390 இலட்சம் அல்லது 2.1 சதவீத விரிவினால் ஓரளவு மாற்றப்பட்டது.

**அட்டவணை I—4**

**பண நிரம்பலிலேற்பட்ட மாற்றம்**
*(1969 திசெம்பர் — 1970 திசெம்பர் இறுதி)*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பண நிரம்பலைப் பாதிக்கும் காரணி | தொகை | |
|---|---|---|
| **1. விரிவுக் காரணிகள்** | | |
| (அ) தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்* .. ... | 104.3 | |
| (ஆ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ... | 43.2 | |
| (இ) வங்கித் துறையிலிருந்து அரசாங்கத்துக்கான கொடுகடன் ... ... | 349.8 | |
| (ஈ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்களினது குறைவு ... | 17.5 | |
| (உ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் கணக்குகளின் (தேறிய) குறைவு ... | 12.4 | 527.2 |
| **2. சுருக்கக் காரணிகள்** | | |
| (அ) வங்கிகளின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் குறைவு ... .. | 1.5 | |
| (ஆ) தனியார் துறைக்கான தவணை சேமிப்பு வைப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு ... | 196.3 | |
| (இ) மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள், கணக்குகளினது (தேறிய) அதிகரிப்பு | 120.4 | |
| (ஈ) அரசாங்கப் பண நிலுவைகளின் அதிகரிப்பு ... ... ... | 124.2 | |
| (உ) சீராக்கங்கள் .. ... ... ... ... ... | 1.1 | 443.5 |
| **3. பண நிரம்பலின் மாற்றம்** ... ... ... ... ... | | **+ 83.5** |

* கூட்டுத்தாபனங்கள் உட்பட.

இவ்வாண்டிலேற்பட்ட நாணய விரிவு முக்கியமாக அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகளாலேற்பட்டிருக்க, தனியார் துறையின் மொத்தத் தாக்கம் சுருக்கத்தன்மையாகவே யமைந்திருந்தது. அரசாங்கத் துறையிலேற்பட்ட தேறிய விரிவு ரூ 1,050 இலட்சமாகும். வங்கித் துறையுடனான அரசாங்கத்தின் கடன்பாடு ரூ. 3,490 இலட்சத்தால் அதிகரித்தது. மத்திய வங்கியிடமிருந்து அரசாங்கப் பத்திரங்களும் முற்பணங்களும் ரூ. 1,550 இலட்சத்தால் அதிகரித்தன. இவை பெரும்பாலும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெற் கொள்வனவுக்கான பொருட்பற்று முற்பணங்களை மீட்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன. அரசாங்கத்துக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 1,940 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, திறைசேரி உண்டியல்களினதும், அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகளினதும் அதிகரிப்பைக் கொண்டிருந்தது எனினும், இவ்வதிகரிப்பு அரசாங்கப் பண நிலுவைகளிலேற்பட்ட ரூ. 1,240 இலட்சம் அதிகரிப்பினாலும், மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களினதும் கணக்குகளிலுமேற்பட்ட ரூ 1,200 இலட்சம் அதிகரிப்பினாலும் ஓரளவுக்கு ஈடுசெய்யப்பட்டது.

இவ்வாண்டுக்கு உடனடியாக முந்திய ஆண்டுகளின் போக்கிற்கு முற்றிலும் முரணாக இவ்வாண்டிற் பண விரிவினைக் குறைப்பதில் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் குறை சிறிதளவு தாக்கத்தையே உண்டுபண்ணிற்று 1969ல் வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களிலேற்பட்ட ரூ. 2,990 இலட்சம் குறைவுக்கு எதிராக 1970ல் பண நிரம்பலின் மீதான இருப்புச் சொத்துகளின் வீழ்ச்சித்தாக்கம் ரூ. 10 இலட்சமாகவே விளங்கிற்று.

## அட்டவணை I—5

### அரசாங்கத்துக்கும் தனியார் துறைகளுக்குமான கொடுகடன்
(ஆண்டுக்கான மாற்றங்கள் பத்து இலட்சங்களில்)

| | 1968 | 1969 | 1970 |
|---|---|---|---|
| அரசாங்கம் | | | |
| மத்திய வங்கியிலிருந்து | +192.0 | + 117.4 | +349.8 |
| 1. கடன்களும் முற்பணங்களும் ... ... ... | + 37.5 | — 7.6 | + 29.5 |
| 2. அரசாங்கப் பிணைகளும் இறைசேரி உண்டியல்களும் ... | +269.4 | + 112.0 | +126 2 |
| உப-மொத்தம் ... ... .. | +306.9 | + 104.4 | +155.7 |
| வர்த்தக வங்கிகளிலிருந்து | | | |
| 1. இறக்குமதி உண்டியல்கள் ... .. | —125.0 | + 87.9 | —141.8 |
| 2. அரசாங்கப் பிணைகளும் இறைசேரி உண்டியல்களும் ... | + 10.1 | — 83.1 | +334.9 |
| 3. ஏனையவை ... ... ... .. | — | + 8.2 | + 0.7 |
| உப-மொத்தம் .. ... ... .. | —114.9 | + 13.0 | +194.1 |
| தனியார் துறை | | | |
| வர்த்தக வங்கிகளிலிருந்து | | | |
| 1. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... ... | + 90.6 | + 69.9 | + 43.2 |
| 2. ஏனைய தனியார் துறை ... ... .. | +173.5 | + 156.2 | +104.3 |
| 3. ஏற்றுமதி உண்டியல்கள் ... ... .. | -+ 26 8 | + 5.7 | + 20.6 |
| உப-மொத்தம் ... ... .. ... | +290.9 | + 231.8 | +168.1 |
| 4. வர்த்தக வங்கிகளுக்காகச் சீராக்கம் செய்யப்பட்டவை ... | — | + 2.4 | + 0.4 |
| உப-மொத்தம் ... ... ... ... | +290.9 | + 229.3 | +167.8 |
| வங்கித் துறையிலிருந்து பெற்ற மொத்தக் கொடுகடன் ... | +482.9 | + 346.7 | +517.6 |

அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் 1970ல் ரூ. 1,470 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு முந்திய ஆண்டின் அதிகரிப்பாகிய ரூ. 2,260 இலட்சத்தைவிட மெச்சத்தக்களவு குறைவாகவிருந்தது. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ், அரசாங்கத்துக்கு நெல் விற்பனைக்கான பொருள் பற்றுச்சீட்டுக்களுக்கெதிராக, கூட்டுத்தாபன நிலையங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடனும் கமத்தொழிற் கொடுகடன் திட்டத்தின் கொடுகடனும் இவ்வதிகரிப்புக்குக் காரணமாகவிருந்தன. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் அதிகரிப்பு தவணை சேமிப்பு வைப்புக்களிலேற்பட்ட ரூ. 1,780 இலட்சங்கொண்ட அதிகரிப்பால் மேலதிகமாக ஈடுசெய்யப்பட்டது. இந்த அதிகரிப்பிற்குப் பெருமளவு காரணம் பணமதிப்பு நீக்கமேயாகும். முக்கியமாக அரசாங்கத்திலிருந்து ஏழுந்த வர்த்தக வங்கிகளின் வளங்களுக்கான கேள்வி முதலொன்பது மாதங்களிற் கணிசமானளவு அதிகமாகவிருந்ததாகும். இக்கேள்வியதிகரிப்பு மத்திய வங்கியி

லிருந்து பெற்ற அதிகரித்த கடன்பாடுகளினுல் நிறைவேற்றப்பட்டது. நாணய மதிப்பு நீக்கஞ் செய்யப்பட்டதன் விளைவால் வர்த்தக வங்கிகளின் திரவ நிலையில் முன்னேற்றங் காணப்பட்டது. இம்முன்னேற்றம் திசெம்பர் மாத விறுதியில் மத்திய வங்கியுடனுன கடன்பாட்டு நிலையை ரூ. 1,480 இலட்சத்துக்குக் குறைப்பதற்கு வர்த்தக வங்கிகளுக்கு வழிவகை செய்தது.

ஆண்டினிறுதி மூன்று மாதங்களில் மிகவும் திருத்திகரமாகவிருந்த வர்த்தக வங்கிகளின் திரவ நிலை ஆண்டின் முதலொன்பது மாதங்களில் மிகவும் இக்கட்டான நிலைக்குள்ளாகிற்று. கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களின தும் மாதாந்த சராசரி மொத்த வைப்புக்களில் 71.4 சதவீதமாக விளங்கிற்று. 1969ல் இது 66.6 ஆக விளங்கிற்று. வங்கிகள் தங்களது மொத்த வைப்புக்களில் முதலீட்டத் தொகுதிகளின் பங்கினை 1969ன் மாதாந்தச் சராசரியாகிய 14.8 சதவீதத்திலிருந்து 1970ல் 13.5 சதவீதத்திற்குக் குறைத்தன. ஆனுல் இறுதி மூன்று மாதங்களிலும் திரவ நிலை அதிகரித்ததனுல் 1970, திசெம்பர் இறுதியில் இப்பங்கு 15.1 சதவீதத்துக்கு உயர்வுற்றது. மொத்த வைப்புக்களிற் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் 1970, திசெம்பர் இறுதியில் 58.6 சதவீதத்துக்கு வீழ்ச்சியுற்றது

கொடுகடன் கொள்கைகளைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஏற்பாடு 1970 சனவரியில் வங்கி வீதத்தை $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $6\frac{1}{2}$ சதவீதத்துக்கு உயர்த்தியமையாகும். 1869 யூலையில் நடைமுறைக்கு வந்த மாற்றியமைக்கப்பட்ட வரம்புகளை மத்திய வங்கி தொடர்ந்து கடைப்பிடித்து வந்தது.

(இ) நாணய மதிப்பு நீக்கம்

1970 ஒற்ரோபர் 25ஆந் திகதி வழங்கப்பட்ட 1970/71 ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட உரையில் மாண்புமிகு நிதியமைச்சர் நடைமுறையிலுள்ள ரூ. 100/-, ரூ. 50/- நாணயத்தாள்கள் 1970 நவெம்பர் 3ஆந் திகதியிலிருந்து சட்டமுறைப்படி செல்லுபடியாகாதெனக் கூறியிருந்தார். நாட்டிலே பதுக்கி வைக்கப்பட்டிருந்த அநேக நாணயத் தாள்களை வெளிக்கொணர்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகவிருந்தது. பதுக்கலை நீக்கும் இத்திட்டம் ரூ. 1000 இலட்சங்கொண்ட மேலதிக வரிச் சேகரிப்புக்களை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டது.

1970 ஒற்ரோபர் 27க்கும் 1970 நவம்பர் 2 ற்குமிடையில், இரு நாட்களும் உட்பட, இந்நாணயத்தாள்களையுடைய எவரேனும் குறிப்பிட்ட உச்சத் தொகையான நாணயத் தாள்களைப் ஒரு வங்கிக்குக் கையளிப்பதன் மூலம் அதேயளவு பெறுமதியுள்ள புதிய நாணயத் தாள்களைப் பெறுவதற்கு உரிமையளிக்கப்பட்டது. இக்குறிப்பிட்ட உச்சமட்டத்தொகை, தொடக்கத்தில் ரூ. 1000 ஆகவிருந்தது. பின்னர், ரூ. 250 ஆகவும், இறுதியில் ரூ. 100 ஆகவும் அமைந்தது. இம்மட்டங்களுக்கு மேலான தொகை ஒரு வங்கியின் கணக்கிலிடப்படவேண்டும். தொடக்கத்தில் இதற்காகவிடுக்கப்பட்ட காலப் பகுதி 1970 நவம்பர் 25 ஆகவிருந்தது. ஆனல் பின்னர் இத்திகதி 1970 நவம்பர் 15க்கு முற்கொணரப்பட்டது. ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேலான இவ்வைப்புக்களின் எடுப்பனவுகள் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் தீர்ப்பனவுக்கு உட்பட்டதாகும்.

இவ்வாண்டின் முதலொன்பது மாதங்களிற் பண நிரம்பலிலேற்பட்ட ரூ. 1,820 இலட்சங்கொண்ட வதிகரிப்பைத் தொடர்ந்து நாணய உடைமைகள் ரூ. 860 இலட்சத்தால் அதிகரித்தன. பண நிரம்பலிலேற்பட்ட அதிகரிப்பின் ஒரு பகுதியை பதுக்கி வைக்கும் நோக்கம் மக்களிடமிருந்ததென்பது ஆண்டின் முதற்பகுதியில் அவர்களிடமிருந்த உயர்ந்த பெறுமதி நாணயத் தாள்களின் உடைமையிலிருந்து தெரியவருகின்றது. 1970 மே இறுதியில் ரூ. 100/-, ரூ. 50/- நாணயத்தாள்களின் உடைமை ரூ. 630 இலட்சத்

தால் அதிகரித்திருக்க, நாணய வெளியீடு ரூ. 800 இலட்சத்தால் அதிகரித்தது. உயர்ந்த பெறுமதியுள்ள நாணயத் தாள்களைப் பதுக்கி வைப்பவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கையெடுக்குமென எதிர்பார்த்தமையால் மே மாதத்துக்கும் யூலை மாதத்துக்குமிடையில் நாணயத் தாள்களின் உடைமையில் வீழ்ச்சியேற்பட்டது. நாணய மதிப்பு நீக்கத்திலிருந்து பண நிரம்பலில் நாணயமாக 1970ல் பண நிரம்பல் ரூ. 830 இலட்சத்தால் அதிகரித்த போதும் சுற்றோட்டத்திலிருந்து நாணயத் தாள்கள், நாணய மதிப்பு நீக்கத்தின் விளைவாக ரூ. 1,480 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. ஐம்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியிலே தோன்றிய போக்கினை இந்நடவடிக்கை ஓரளவுக்கு மாற்றியமைத்துள்ளது. மக்கள் சீராக்கஞ் செய்வதற்குப் போதிய காலம் செல்லாமையால் மேற்கூறிய மாற்றுப் போக்கு நிலையானதாவென்பதைப் பற்றி விரைவில் ஒரு முடிவுக்கு வரவியலாது. நாணய மதிப்பு நீக்கத்தின் நன்மை பயக்கும் ஒரு பண்பு யாதெனில் பொதுமக்களில் ஒரு கணிசமான பகுதி முதன்முறையாக வங்கிகளுடன் தொடர்பு வைத்தமையாகும். இது முக்கியமாகக் கிராம மக்களிடையில் வங்கி தொடர்பினை உண்டுபண்ணுமென்பதில் ஐயமில்லை.

நாணயத்தினைப் பதுக்குவோர்களையும் வரியிலிருந்து தப்புவோர்களையும் வெளிக்கொணர்வதற்கு அரசாங்கத்தாலெடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாக நாணய மதிப்பு நீக்கம் அமைந்துள்ளது.

1970 ஒற்றோபர் 24இல் சுற்றோட்டத்திலிருந்த மதிப்பு நீக்கப்பட்ட நாணயத் தாள்களின் மொத்தப் பெறுமதி ரூ. 7,920 இலட்சமாகும். புதிய நாணயத் தாள்களை மாற்றாகப் பெறுவதற்கு மக்களாற் கையளிக்கப்பட்ட மதிப்பு நீக்கப்பட்ட நாணயத் தாள்களின் மொத்தப் பெறுமதி ரூ. 1,530 இலட்சமாக அமைந்திருக்க, வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 5,690 இலட்சமாக அமைந்திருந்தது.

### (3) 1970ல் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள்

1970ல் சென்மதி நிலுவைகளின் முக்கியமானதொரு பண்பு யாதெனில், நடைமுறைக் கணக்கினது பற்றாக் குறையிலேற்பட்ட குறைவேயாகும். இதற்குக் காரணம், ஏற்றுமதிகளின் வருவாய்களிலேற்பட்ட அதிகரிப்பாகும். இவை இவ்வாண்டில் ரூ. 1,020 இலட்சத்தால் ரூ. 20,110 இலட்சத்துக்கு அதிகரித்தன. இதேவேளையில் இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டதனால் இறக்குமதிக் கொடுப்பனவுகள் குறைவுற்றன. ஏற்றுமதி வருவாய்களிலேற்பட்ட மெச்சத்தக்க அதிகரிப்பு இறக்குமதிகளின் பெரும் பகுதியினை நாட்டின் சொந்த வளங்களால் நிதியீட்டுவதற்கு வழிவகை செய்தது. கிடைக்கப்பெற்ற உதவியும் வழங்குவோர் கொடுகடன்களும் ஏற்றுமதி வருவாய்களிலிருந்து பெற்ற வெளிநாட்டுச் செலாவணியின் வருவாய்களுக்கு மேலாக ரூ. 4,690 இலட்சமளவுக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வழிவகை செய்தது.

சென்மதி நிலுவையிலேற்பட்ட பெரியதொரு மாற்றம் பணித்துறைக் கணக்கிலேயே ஏற்பட்டது. இக்கணக்கின் குறைவு 1969இன் ரூ. 970 இலட்சத்திலிருந்து 1970இல் ரூ. 1,430 இலட்சத்துக்கு அதிகரித்தது. பெரிய வெளிநாட்டுப் படுகடனின் மீதான வட்டிக் கொடுப்பனவின் அதிகரிப்பு ரூ. 1,010 இலட்சங்கொண்ட வெளிப்பாய்வை ஏற்படுத்தியது. இது 1968இற் செய்யப்பட்ட கொடுப்பனவைவிட இரு மடங்காகும். சுற்றுலாவிலிருந்து பெற்ற வருவாய்கள் ரூ. 170 இலட்சத்திலிருந்து 1970ல் ரூ. 220 இலட்சத்துக்கு அதிகரித்தன. வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் சுற்றுலா வருவாய்களை அதிகரிப்பதற்கு ஒரு காரணியாக அமைந்தது.

வெளிநாட்டு வளத்தினது இடைவெளி முந்திய ஆண்டினைவிடக் குறைவாகவிருந்தபோதும், அதன் நிதியீட்டம் 1970ல் மிகப் பெரும் பிரச்சினையாக அமைந்தது. அரசாங்கத்தாலும் மத்திய வங்கியாலும் செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் மீளக் கொடுப்பனவு 1969ன் ரூ. 3,610 இலட்சத்திலிருந்து 1970ல் ரூ. 6,290 இலட்சத்துக்கு 74.2 சதவீதத்தினல் அதிகரித்தது. இதனில் பெரும்பகுதி அதாவது ஏறக்குறைய 72.2 சதவீதம் உடனடியாக முந்திய காலப் பகுதியிற் பெறப்பட்ட குறுந்தவணைக் கடன்களின் மீளக் கொடுப்பனவுகளாகும். இவற்றிற் பெரும்பகுதி மீளக் கொடுப்பனவுகள் ப. நா. நி. உக்காகவும். 1969 வரைக்கும் இந்நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள் மீளக் கொடுப்பனவுகளை மிஞ்சியுள்ளன. ஆனல் 1970ஆம் ஆண்டு ஏனைய ஆண்டுகளைவிட வேறாக அமைந்தது. இவ்வாண்டின் மீளக் கொடுப்பனவுகள் எடுப்பனவுகளை ரூ. 1,040 இலட்சத்தால் மிஞ்சியிருந்தன. வெளிநாட்டு உதவியும் கடன்களும் முழு வளத்தினது இடைவெளியையும் நிரப்புவதற்குப் பற்றுமலிருந்ததால் இலங்கை 1970ல் சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கீடுகளின் முழுத் தொகையாகிய ரூ. 780 இலட்சத்தையும் பயன்படுத்த வேண்டியிருந்தது. ''சென்மதி நிலுவைப் பிரச்சினை'' என்ற பகுதி 70ஆம் ஆண்டுகளில் சென்மதி நிலுவை நிலை இக்கட்டான நிலையை அடைவதற்கான முந்திய போக்கினை எடுத்துக்காட்டுகின்றது. இதனைப் பார்க்கும்போது ஒத்த நிலை இன்மையின் மூல காரணத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். அதாவது மூலதனக் கொடுப்பனவுகளின் குறை படிப்படியாக அதிகரித்துச் சென்றுள்ளது புலனுகின்றது. ரூ. 11,240 இலட்சங்கொண்ட வளத்தினது இடைவெளியில் 41.6 சதவீதமே நடைமுறைக் கணக்குக்குக் குறைவாக இருக்கிறது. ரூ. 6,560 இலட்சம் மூலதன மீளக் கொடுப்பனவுகளாகும் இது 1969ன் நிலைக்கு முற்றிலும் முரணுக அமைந்துள்ளது. 1969ல் 31.7 சதவீதமே மூலதனக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. மீதி நடைமுறைக் கணக்குக் குறைக்குப் பயன்படுத்தப்பட்டது. 1970திலும். நேரடியான முந்திய காலப் பகுதியிலும் மூலதன மீளக் கொடுப்பனவுகள் ஒன்ருக நிகழ்ந்தமைக்குக் காரணம் 1960ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலும் கடைப் பகுதியிலும் பெறப்பட்ட கடன்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைக் காலப்பகுதி முடிவுற்றமையாலும் அறுபதாம் ஆண்டுகளின் கடைசிப் பகுதியிற் பெற்ற வழங்குவோர் கொடுகடனின் கொடுப்பனவு தற்போது கொடுக்க வேண்டியிருப்பதனுலுமாகும்.

## (4) விலைகள்

1970ல் விலை அதிகரிப்புக்கள் முந்திய ஆண்டினைவிடச் சிறிது குறைவாக இருந்தன. விலைகளிலேற்பட்ட 5.9 சதவீத அதிகரிப்பு 1969 தினைவிட மெச்சத்தக்களவு குறைவாகவிருந்தாலும், 1968டுடன் ஒத்திருந்தன, விலை மட்டத்தை உயர்த்திச் சென்ற முக்கிய காரணிகள் நாணய விரிவினுலேற்பட்ட கேள்வியதிகரிப்பும் 1969துடன் ஒப்பிடும்போது கிடைக்கப்பெற்ற பொருட்களின் அளவிலேற்பட்ட குறைவுமாகும். மொத்த விற்பனை வரிகளும் விலைகளை உயர்த்தக் காரணமாகவிருந்தன. நிரம்பல் செய்யும் நாடுகளில் விலைகள் அதிகரித்ததனுல் முக்கியமாக உணவினதும் உடையினதும் விலைகள் அதிகரித்தன.

கடந்த சிலவாண்டுகளின் பொதுப்படையான போக்குகளுடன் ஒப்பிடும்போது 1970ன் விலையதிகரிப்பு விகிதம் சிறிதளவானதேயாகும். உலகப் பொருளாதாரத்தில் காலப்போக்கில் எல்லா விலைகளும் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருக்கையில் விலைகள் ஒப்பீடாக நிலையாகவோ சராசரி விலைமட்டம் வீழ்ச்சியுறுவதையோ நாங்கள் ஊகிக்க முடியாது. தயாரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதியில் முக்கியமாகத் தங்கியிருக்கும் அநேக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 5 சதவீத விலையதிகரிப்பு ஏற்கக்கூடியது மட்டுமன்றி எதிர்பார்க்கவேண்டியதொன்றுமேயாகும்.

### (5) அரசாங்க முயற்சிகள்

1969/70ஆம் ஆண்டு இறுதியில் அரசாங்க முயற்சிகளிலிருந்து மொத்த மூலதன முதலீட்டம் ரூ. 42,150 இலட்சமாகும். இதனில் கைத்தொழிலிற் செய்யப்பட்ட முதலீட்டம் ரூ 13,470 இலட்சமாகவும் பணிகளிற் செய்யப்பட்டவை ரூ. 28,300 இலட்சமும், கமத்தொழிலிற் செய்யப்பட்டவை ரூ. 380 இலட்சமுமாகும். 1969/70ல் அரசாங்கத் துறைக் கைத்தொழிலிலிருந்தான மதிப்பிடப்பட்ட மொத்த இலாபம் ரூ. 699 இலட்சமாகவிருந்தன. இதனுல் கைத்தொழிற்றுறை ரூ. 611 இலட்சங்கொண்ட தேறிய இலாபத்தையளித்தது. பணித்துறையிலேற்பட்ட ரூ. 629 இலட்ச இலாபத்திற்கெதிரா நட்டம் ரூ. 1,050 இலட்சமாக விளங்குகிறது. இதனுல் பணித்துறையிலேற்பட்ட தேறிய நட்டம் ரூ. 430 இலட்சமாகும். மூன்று துறைகளையும் ஒன்ருகவெடுத்து நோக்கும்போது அரசாங்கத் துறைபெற்ற மதிப்பிடப்பட்ட தேறிய இலாபம் ரூ. 169 இலட்சமாகும். மொத்த மூலதனச் செலவிலிருந்து பெற்ற வருவாயைக் கணிக்கும்போது இது 0.4 சதவீதமாக விளங்குகின்றது.

அரசாங்க முயற்சிகள் என்னும் பிரிவு கைத்தொழில் பணித்துறைகளிலுள்ள கூட்டுத்தாபனங்களின் தனிப்பட்ட இலாப நிலையினை எடுத்துக்காட்டுகின்றது. நிதி நிலையினைப் பொறுத்தவரை பெற்ருேலியம், சீமெந்து, கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம், காப்புறுதி ஆகிய கூட்டுத்தாபனங்கள் பொதுவில் ரூ. 150 இலட்சத்துக்கு மேலான இலாபத்தினைப் பெறமுடிந்தது. மறுபக்கத்தில் சில கூட்டுத்தாபனங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவிற்கு மட்டுமே இலாபத்தைப் பெறுகின்றன. இவ்விலாபங்கள் எல்லையளவானதாகவும், மூலதனத்தின் பெரிய முதலீட்டச் செலவோடு நோக்கும்போது குறைந்த வருவாயுடையதாகவும் விளங்குகின்றன.

1960ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது நட்டங்களைப் பெறும் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் எண்தொகை குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது. உண்மையில் 1969/70ல் ஐந்து கைத்தொழில் கூட்டுத்தாபனங்களே நட்டமடைந்தன. எனினும் பணித்துறையைப் பொறுத்தமட்டில் நட்டங்களே புறநடையாகவிருந்தது இதனில் மிகக் கூடிய நட்டங்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையிலும் அரசாங்கத் திணைக்களமாக விளங்கும் அரசாங்கப் புகைவண்டிச் சேவையிலும் ஏற்பட்டுள்ளன. 1969/70ல் இவ்விரு முயற்சிகளினதும் மதிப்பிடப்பட்ட நட்டம் ரூ. 892 இலட்சமாகும் இவை அரசாங்கத் துறையின் மொத்த இலாபப் போக்கினைக் குறைப்பதற்குக் குறிப்பிடத்தக்க காரணமாக விளங்கிற்று. இவ்விரு முயற்சிகளும் முன்னேற்றமொன்றைக் காட்டுமாயின், இது அரசாங்கத் துறையின் முதலீட்டத்திலிருந்து பெறப்படும் சராசரி வருவாயை 2.5 சதவீதத்துக்கு உயர்த்த உதவிசெய்யும்.

அரசாங்கத் துறை நாட்டின் பொருளாதார அமைப்பில் முக்கிய இடம் பெற்றிருப்பதனுல் இத்துறையிலுள்ள முயற்சிகள் திறனுடனும் தானுக விளங்கும் ஆற்றலுடையனவாகவும் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உற்பத்தி, இறக்குமதித் துறையிலும் மொத்த வணிக விற்பனையிலும் அரசாங்க ஆதிக்கமும் தலையீடும் அதிகரித்து வருவதால் காலப் போக்கில் தனியார் துறையின் பொருளாதாரக் கடமைகள் குறைவுற்று வரும். முக்கியமாக கடந்த காலங்களில் முதலீட்டத்துக்கு வளங்களை அளித்து வந்த தனியார் துறையின் உதவி நுகர்ச்சி முதலீட்ட நோக்கங்களுக்காக வரிகள் கட்டணங்கள், வடிவில் வருமானத்துக்கு அதிக வளங்களைத் தனியார் துறை அளித்து வருகின்றது. செலாவணி வருவாய்களில் 90 சதவீதத்துக்கு மேலான தொகை தனியார் துறைத் தொழிற்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்றது. இவ் வளங்களை அளிப்பதற்கு அரசாங்கத் துறை கூடியளவு முயற்சி செய்யவேண்டும்.

அரசாங்கத் துறை முயற்சிகள் தங்களது இலாபங்களை அதிகரிப்பதன் மூலமும், உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளில் பரப்புவதன் மூலமுமே அரசாங்கத் துறை இதனைப் பெறமுடியும். முக்கியமாக எல்லையளவு இலாபங்

களைப் பெறும் அரசாங்க முயற்சிகள் படிப்படியாகத் தங்கள் இலாபங்களை அதிகரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அரசாங்க முயற்சிகளின் பெரும்பாலானமை தனியுரிமை பெற்றவையாகையால் அவைகளுக்குச் சந்தைப் படுத்தும் பிரச்சினையில்லை. இது அரசாங்கத் துறை முயற்சிகள் நியாயமான விலைக் கொள்கைகளை அமைப்பதற்கும், தரத்தினை உயர்த்துவதற்கும், நிருவாக மேலதிகச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் வாயிலாகச் செலவுகளைக் குறைப்பதற்கும் வழிவகை செய்யும். இக்குறிக்கோளை அடைவதற்கு அரசாங்கத் துறையில் கூலி மட்டங்கள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அமையவேண்டும். ஆகையால் வருங்காலத்திற் செய்யப்படும் கூலி அதிகரிப்புக்கள், திறனையும், உற்பத்தியையும் அதிகரிக்கக்கூடிய வகையில் ஊக்கக் கொடுப்பனவாக அமைதலே சிறப்பாகும்.

## (ஆ) சென்மதி நிலுவைப் பிரச்சினை

இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினைகள் பத்தாண்டு காலங்களாக இருந்து வந்துள்ளன. இவை முந்திய ஆண்டறிக்கைகளிற் குறிப்பிடப்பட்டுள்ளன. 1959/60ல் ஏற்பட்டுள்ள வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையையொட்டி அரசாங்கங்கள் ஆழ்ந்த கவனம் எடுத்தன. 1960ஆம் ஆண்டினதும் அதற்குப் பிந்திய ஆண்டறிக்கைகளும் சீர்கெட்டுச் செல்லும் கொடுப்பனவுகள் பற்றி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தன. காலத்துக்குக்காலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் சென்மதி நிலுவை தொடர்ந்தும் சீர்கெட்ட நிலையிலிருந்தது. இப்பகுதி சீர்கெட்டுச் செல்லும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளுக்கான காரணிகளைப் பற்றி ஆய்வு செய்யும்.

போருக்குப் பிந்திய காலப் பகுதியில் வெளிநாட்டு வர்த்தகம் இரு குறுகிய காலச் செழிப்புக்களைக் கொண்டிருந்தது. இவையாவன, இரப்பரின் விலைகளை உயர்த்திய 1950/51 ஆண்டுக் காலக் கொரியப் போர்ப் பூரிப்பினுலும், தேயிலையின் விலைகள் மெச்சத்தக்களவு உயர்ந்து, சென்மதி நிலுவையில் ஒரு மிகையினை ஏற்படுத்தி 1956ல் 11,940 இலட்ச மட்டத்திற்கு வெளிநாட்டுச் சொத்து உயர்ந்தது. அக்காலந்தொட்டு இற்றைவரை வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்ந்து வீழ்ச்சியுற்று வந்துள்ளன. 1965ஆம் ஆண்டினைவிட 1957ஆம் ஆண்டு தொடக்கம் வெளியுலகுடனை இலங்கையின் நடைமுறைக் கொடுப்பனவுகள் நடைமுறை வருவாய்களைவிட அதிகரித்துள்ளன. 1957–1960 காலப் பகுதியிலேற்பட்ட குறைகளுக்கான முக்கிய காரணம், இறக்குமதிக் கேள்வி வெளிநாட்டு வருவாய்களின் வீழ்ச்சியாற் பாதிக்கப்பட்ட இலங்கையின் இறக்குமதித் திறனை மிஞ்சியிருந்தமையாகும். மறுபக்கத்தில் அதிகரித்த இறக்குமதிக் கேள்வி விரிவுத் தாக்கத்தையுடைய வரவுசெலவுத்திட்டப் பற்ருக்குறைகளினுலாகும்.

**ஏற்றுமதி வருவாய்கள்**

பாதகமான கொடுப்பனவு நிலைக்கான முக்கிய காரணி வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளுக்குக் கிடைக்கப்பெற்ற சாதகமற்ற விலைப்போக்குகளாகும். 1947ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வோராண்டும் இலங்கையின் மூன்று முக்கிய ஏற்றுமதிப் பொருட்களினதும், ரூபா, டொலர் பெறுமதிகளையும் அவற்றுக்குத் தொடர்பான ஏற்றுமதி அளவுகளையும் அட்டவணை 1–6 தருகின்றது. ஏற்றுமதிகளிலிருந்து பெற்ற உண்மையான வெளிநாட்டுச் செலாவணியைக் காட்டுவதற்காகப் பெறுமதிகள் ஐ. அ. டொலர்களிலும் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை 1—6

### இலங்கையின் ஏற்றுமதி அளவுகளும் வருவாய்களும்

| ஆண்டு | தேயிலை | | | இரப்பர் | | | மூன்று முக்கிய தெங்குப் பொருட்கள் | | | மொத்த ஏற்றுமதிகள்* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அளவு | பெறுமதி | | அளவு | பெறுமதி | | அளவு | அளவு | | அளவு | |
| | ப.இ.இரு. | ரூபா ப.இ. | டொலர் ப.இ | ப.இ.இரு. | ரூபா ப.இ. | டொலர் ப.இ. | காய்கள் ப.இ. | ரூபா சதம் | டொலர் ப.இ. | ரூபா ப.இ. | டொலர் ப.இ. |
| 1947 | 287.3 | 567 | 170.8 | 182.2 | 137 | 39.2 | 572 | 93 | 28.0 | 829 | 267.8 |
| 1948 | 296.0 | 590 | 177.7 | 207.3 | 143 | 43.1 | 970 | 153 | 46.1 | 1,011 | 304.5 |
| 1949 | 297.6 | 650 | 195.8 | 197.0 | 125 | 37.7 | 940 | 168 | 50.6 | 1,063 | 320.2 |
| 1950 | 298.1 | 752 | 158.0 | 265.1 | 405 | 85.1 | 1030 | 248 | 52 1 | 1,563 | 328.4 |
| 1951 | 305.2 | 800 | 168.1 | 229.1 | 582 | 122.3 | 1263 | 320 | 67.2 | 1,904 | 400.0 |
| 1952 | 314.5 | 723 | 151.9 | 209.8 | 373 | 78.4 | 1454 | 232 | 48.7 | 1,502 | 315.5 |
| 1953 | 335.6 | 825 | 173.3 | 217.3 | 338 | 71.0 | 1262 | 244 | 51.3 | 1,568 | 329.4 |
| 1954 | 361.3 | 1,123 | 235.9 | 209.4 | 285 | 59.9 | 1171 | 212 | 44.5 | 1,809 | 380.0 |
| 1955 | 362.2 | 1,194 | 250.8 | 222.3 | 350 | 73.5 | 1531 | 225 | 47.3 | 1,940 | 407.6 |
| 1956 | 348.1 | 1,044 | 219.3 | 193.0 | 293 | 61.6 | 1418 | 213 | 44.7 | 1,735 | 364.5 |
| 1957 | 368.1 | 1,022 | 214.7 | 208.6 | 300 | 63.0 | 950 | 156 | 32.8 | 1,682 | 353.4 |
| 1958 | 411.2 | 1,132 | 237.8 | 207.2 | 258 | 54.2 | 890 | 164 | 34.5 | 1,711 | 359.5 |
| 1959 | 383.8 | 1,046 | 219.7 | 205.8 | 298 | 62.6 | 1140 | 244 | 51.3 | 1,754 | 368.5 |
| 1960 | 410.2 | 1,096 | 230.3 | 234.6 | 378 | 79.4 | 976 | 184 | 38.7 | 1,832 | 384.9 |
| 1961 | 426.0 | 1,115 | 234.2 | 197.3 | 260 | 54 6 | 1355 | 202 | 42.4 | 1,733 | 364.1 |
| 1962 | 452.0 | 1,149 | 241.4 | 224.5 | 290 | 60.9 | 1530 | 227 | 47.7 | 1,808 | 379.8 |
| 1963 | 455.9 | 1,140 | 239.5 | 209.5 | 257 | 54.0 | 1208 | 198 | 41.6 | 1,731 | 363.7 |
| 1964 | 455.7 | 1,142 | 239.9 | 253.2 | 290 | 60.9 | 1618 | 273 | 57.4 | 1,786 | 394 1 |
| 1965 | 494.6 | 1,210 | 254.2 | 266.8 | 304 | 63.9 | 1270 | 275 | 57.8 | 1,949 | 409.5 |
| 1966 | 441.3 | 1,027 | 215.8 | 298.4 | 337 | 70.8 | 1017 | 196 | 41.2 | 1,700 | 357.1 |
| 1967 | 477.7 | 1,061 | 222.9 | 290.9 | 282 | 59 2 | 940 | 167 | 35.1 | 1,690 | 355.0 |
| 1968 | 460.2 | 1,162 | 195.4 | 328.3 | 331 | 55.6 | 1096 | 331 | 55.6 | 2,035 | 342.0 |
| 1969 | 444.5 | 1,062 | 178.5 | 314.8 | 431 | 72.4 | 896 | 221 | 37.1 | 1,916 | 322.0 |
| 1970 | 459.7 | 1,120 | 188.2 | 354.2 | 440 | 73.9 | 874 | 237 | 39.8 | 2,033 | 341.7 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

* மீள ஏற்றுமதிகளையும் உட்படுத்தும்

செலாவணி வீதங்கள்—1947-49 : 1 ஐ.அ. டொ. ரூ. 3.32
(1949, செத்தெம்பரில் ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டது.)

1950-67 : 1 ஐ.அ. டொ. ரூ. 4.76
(1967, நவெம்பரில் ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டது.)

1968 தொடக்கம் : 1 ஐ.அ. டொ. ரூ. 5.95

*1947ல் இலங்கை 2,870 இலட்சம் இருத்தல்கள் தேயிலையை ஏற்றுமதி செய்து $ 1,700 இலட்சத்தை வருவாயாகப் பெற்றது. 1970ல் 4,590 இலட்சம் இருத்தல்கள் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த தேயிலை ஏற்றுமதி வருவாய் $ 1,880 இலட்சமாகும். 1947க்கும் 1970க்குமிடையில் ஏற்றுமதியளவு 60 சதவீதத்தால் அதிகரித்தபோதும் பெறுமதி 10 சதவீதத்திலேயே அதிகரித்துள்ளது. ஏற்றுமதி வருவாய்களில் வேறுபாடு ஏற்பட்டதற்குக் காரணம் 1960ஆம் ஆண்டுகளில் விலைகள் மிக மந்த நிலையை அடைந்தமையேயாகும். இடைக்காலப் பகுதியில் முக்கியமாக 1950ஆம் ஆண்டுகளின் மத்தியில் தேயிலை ஏற்றுமதிச் சந்தை 1968/70இனை விடச் சாதகமாகவிருந்தது. 1955ல் இலங்கை 3,620 இலட்சம் இருத்தல்களை ஏற்றுமதிசெய்து 2,500 இலட்சம் டொலர்களை வருவாயாகப் பெற்றது. இது தேயிலைக்கு கவர்ச்சிகரமான விலைகள் கிடைத்த பூரிப்புக் காலப்பகுதியிலாகும். 1965இல் ஏற்றுமதிகளின் உச்சமட்டமாகிய 4,940 இலட்சம் இருத்தல்களின் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதி வருவாய் $ 2,540 இலட்சமாகும். இவ்வரு*

மான அதிகரிப்பு, தேயிலையின் விலைகள் அதிகரித்ததனாலன்றி ஏற்றுமதியளவு அதிகரித்ததனாலாகும். 1957 தொடக்கம் விலைகள் பொதுவாகப் பாதகமாக வேயிருந்தன. 1960ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்றுமதி அளவு அதிகரிப்புக் கள் குறைவுற்ற ஏற்றுமதி விலைகளிலிருந்து கிடைத்த வருவாய் இழப்பினை ஓரளவு ஈடுசெய்ய உதவியிருந்தபோதும், வெளிநாட்டுச் செலாவணி வரு வாய்கள் வீழ்ச்சியுற்றுள்ளன.

தேயிலையினை விட இரப்பரின் போக்குச் சிறிது நன்றாக அமைந்திருந்தது. 1947ல் 1,820 இலட்சம் இருத்தல்கள் கொண்ட இரப்பர் ஏற்றுமதி செய் யப்பட்டு $390 இலட்சம் வருவாயாகப் பெறப்பட்டது. 1970ல் 3,540 இலட் சம் இருத்தல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு $ 730 இலட்சம் வருவாயாகப் பெறப்பட்டது. 1947 தொடக்கம் 1970 வரையான காலப்பகுதியில் இரப்பர் ஏற்றுமதிகள் 95 சதவீதத்தால் அதிகரித்திருக்க, மொத்த ஏற்றுமதி வருவாய் கள் 85 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. இங்கும் உயர்ந்த விலைகளைவிட உயர்ந்த ஏற்றுமதியளவுகளே ஏற்றுமதி வருவாய்கள் அதிகரிப்பதற்குக் கார ணமாகவிருந்தன. 1956/57லும் 1962/64லும், 1967/68லும் விலைகள் சரியான மந்தநிலையை அடைந்திருந்தன. 1967/68இல் விலைகள் மிகக் குறைந்த மட்டத்தையடைந்திருந்தன 1951ஆம் ஆண்டு பொதுவான போக்குக்கு மாறாக அமைந்திருந்தது இவ்வாண்டில் 2,290 இலட்சம் இருத்தல்கள் கொண்ட இரப்பர் ஏற்றுமதி செய்யப்பட்டு $ 1,220 இலட்சம் வருவாயாகப் பெறப்பட் டன.

தெங்குப் பொருட்களைப் பொறுத்தவரை விலையிலும் அளவிலும் தளம்பல் கள் காணப்பட்டன இரப்பரின் ஏற்றுமதி அளவு பொதுவாக அதிகரித்த போக்கினைக் காட்டியிருக்க, (இப்போக்கு 1964 தொடக்கம் குறிப்பாகக் காணப்பட்டது) தெங்குப் பொருட்களின் ஏற்றுமதியளவிலேற்பட்ட தளம்பல் குறிப்பிடத்தக்கதாகும். 1947ல் ஏற்றுமதியளவு 5,720 இலட்சம் தேங்காய் களாகவிருந்து 1952ல் 14,540 இலட்சம் தேங்காய்களுக்கு அதிகரித்திருக்க, 1955ல், இது 15,310 இலட்சம் தேங்காய்களாகவிருந்து 1958ல் 8,900 இலட் சம் தேங்காய்களுக்கு வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதியளவின் இரண்டாவது உச்சப் பகுதி 1964ற் பெறப்பட்டது. இவ்வாண்டில் ஏற்றுமதியளவு 16,180 இலட்சம் தேங்காய்களாகவிருந்து 1969ல் 8,960 இலட்சம் தேங்காய்களுக்கும் 1970ல் 8,740 இலட்சம் தேங்காய்களுக்கும் வீழ்ச்சியுற்றது. 1970ல் ஏற்றுமதி செய் யப்பட்ட தொகையே 1958ஆம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் கிடைக்கப் பெற்ற மிகக் குறைந்தனவாகும். தேயிலையையும் இரப்பரையும் போலல்லாது தெங்குப் பொருட்களைப் பொறுத்தவரை அதன் ஏற்றுமதியளவு வீழ்ச்சி அதி கரித்த விலைகளினால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக 1962ல் 15,300 இலட்சம் தேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டபோது பெறப்பட்ட வருவாய் 470 இலட்சம் டொலர்களாகவிருக்க, 1965ல் 12,700 இலட்சம் தேங் காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டபோது $ 570 இலட்சம் வருவாயாகப் பெறப் பட்டது. 1969திலும் 1970திலும் ஏற்றுமதியளவு மிகக் கூர்மையாக வீழ்ச்சி யுற்றபோதும், உயர்ந்த விலைகளினால் வருவாய்கள் முறையே $ 370 இலட்சம் $ 390 இலட்சமாக விளங்கின. பொதுவாகக் கூறினால் ஏற்றுமதியளவில் தளம் பல்கள் ஏற்பட்டபோதும் தெங்குப் பொருட்களிலிருந்து கிடைத்த ஏற்றுமதி வருவாய்கள் கூடிய உறுதிப்பாட்டினைக்காட்டியுள்ளன. பலவேளைகளில் ஏற்று மதியளவிலேற்பட்ட வீழ்ச்சியை விலைகள் ஈடுசெய்துள்ளன.

எல்லா ஏற்றுமதிகளையும் கணக்கிலெடுக்கும்போது 1970ல் பெறப்பட்ட $ 3,410 இலட்சம் வருவாய்கள் 1954—1968 ஆண்டுகளுக்கிடையில் எந்த வொரு ஆண்டிலும் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதி வருவாய்களைவிடக் குறைவான தாகும் 1947ல் மூன்று முக்கிய ஏற்றுமதிகளிலிருந்தும் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய்கள் 2,670 இலட்சம் டொலர்களாகும். 1950ல் இவை 3,280 இலட்சம் டொலர்களாகவும், 1970ல் 3,410 இலட்சம் டொலர்களாகவும் விளங்கின. 1950ஆம் ஆண்டு தொடக்கம் 20ஆண்டுக் காலப் பகுதியில் மொத்த ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பு 130 இலட்சம் டொலர்கள் அல்லது 4சத வீதம் மட்டுமேயென்பதனை மேற்கூறிய ஆய்வு காட்டுகின்றது.

## வர்த்தக மாற்று வீதம்

இப்போக்குகள் யாவும் இறக்குமதி விலைகளிலேற்படும் மாற்றத்தின் விளைவுகளையும் கணக்கிலெடுக்கும் வர்த்தக மாற்று வீதத்தில் நன்முகக் காட்டப்பட்டுள்ளன. 1961ஆம் ஆண்டு தொடக்கம் வர்த்தக மாற்று வீதம் இடைவிடாது பாதகமாக அமைந்துள்ளது. 1962—1964 ஆம் ஆண்டுப் பகுதிகளில் வர்த்தக மாற்று வீதக் குறிகாட்டி (அடியாண்டு 1967=100) 142லிருந்து 105க்கு 26 சதவீதத்துக்கு மேலாக வீழ்ச்சியுற்றுள்ளது. மீண்டும் 1965—1969 ஆண்டுக்கான காலப்பகுதியில் குறிகாட்டி 112இலிருந்து 88உக்கு 21 சதவீதத்துக்கு மேலாக வீழ்ச்சியுற்றுள்ளது.

வர்த்தக மாற்று வீதத்திலேற்பட்ட பாதகமான போக்கு, சென்மதி நிலுவையிலேற்படுத்திய பிரச்சினைகளைக் கீழ்வரும் அட்டவணையிலிருந்து எடைபோடலாம்.

### அட்டவணை 1–7

### 1960–70[1] வர்த்தக மாற்று அசைவுகளுக்குக் காரணமாக அமையக் கூடிய நடைமுறைக் கணக்குக் குறைநிலைகள்

பத்து இலட்சம் ரூபாக்களில்

| ஆண்டு | நடைமுறைக் கணக்கு நிலுவை | வர்த்தக மாற்றுக்களின் விலைகள் |
|---|---|---|
| 1960 | – 220 | – 11 |
| 1961 | – 94 | – 151 |
| 1962 | – 140 | – 82 |
| 1963 | – 168 | – 242 |
| 1964 | – 160 | – 316 |
| 1965 | 59 | – 309 |
| 1966 | – 290 | – 505 |
| 1967 | – 288 | – 667 |
| 1968 | – 355 | – 784 |
| 1969 | – 797 | – 811 |
| 1970 | – 503 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. வர்த்தக மாற்று வீதத்தில், ஏற்படும் மாற்றங்களினால் உண்டாகும் வருமான இழப்பு, ஏற்றுமதிகளின் க.ஏ. பெறுமதியினை இறக்குமதி விலைக் குறிகாட்டியினாலும், பின்னர் ஏற்றுமதி விலைக் குறிகாட்டியினாலும் குறைவுபடுத்துவதன் மூலம் பெறப்படுகிறது. வர்த்தக மாற்று வீதம் இலங்கைக்கு எதிராகச் சென்றிருப்பதினால், இவ்விரு எண்தொகைகளுக்குமுள்ள வேறுபாடு இலங்கையின் ஏற்றுமதிகள் அதன் இறக்குமதிகளுக்கு மாற்றுச் செய்யும் வீதத்தினால் ஏற்படும் இழப்பினைக் காட்டும்.

1965 தொடக்கம் ஒவ்வோராண்டிலும் வர்த்தக மாற்று வீத வீழ்ச்சித் தாக்கம் அதிகமாகவிருந்தபோது பாதகமான வர்த்தக மாற்று வீதத்தினால் இலங்கைக்கு ஏற்பட்ட செலாவணி 'இழப்பு' நடைமுறைக் கணக்கிலேற்பட்ட குறையைவிட அதிகமாகவிருந்ததென்பதை அட்டவணை காட்டுகின்றது. மறு சொற்ளெடர்களிற் கூறினால், ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் விலைகள் 1959ஆம் ஆண்டு மட்ட நிலையிலிருந்தால் 1965—1969 காலப்பகுதியிலேற்பட்ட ஏற்றுமதியளவும் இறக்குமதியளவும் நடைமுறைக் கணக்குக் குறைக்கெதிராக மிகையையுண்டுபண்ணியிருக்கும்.

வர்த்தக மாற்று வீதம் சீர்கேடடைவதற்குக் காரணமாகவிருந்த பல காரணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:–

(அ) இறக்குமதிகள் மீது இலங்கை கொடுக்கவேண்டிய கூரிய விலையதிகரிப்புக்கள்; இத்துடன் சுயெஸ் கால்வாய் மூடப்பட்டதனுலேற்பட்ட அதிகரித்த கப்பற் கட்டணங்களைவிட இலங்கை அண்மையாண்டுகளில் மேலும் அதிகரித்த கப்பற் கட்டணங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

(ஆ) இலங்கையின் இரு முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான தேயிலைக்கும், இறப்பருக்கும் சார்பளவிற் கிடைத்த குறைவான விலைகளாகும். தேயிலை விலைகள் 1960ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் கிடைக்கப்பெற்ற குறைந்த மட்டத்திலேயே இருந்து வந்துள்ளன. இயற்கை இரப்பர் செயற்கை இரப்பரிலிருந்தான அதிகரித்த போட்டியை எதிர்நோக்க வேண்டியிருந்ததுடன் பெரிய வல்லரசுகளின் இரப்பர்க் கையிருப்புக் கொள்கைகளினுலேற்பட்ட ஐயப்பாடுகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

(இ) கொடுகடனினுல் அல்லது உதவி ஒழுங்குகளின் கீழ் இறக்குமதிகளுக்கு வழமையாக வழங்க வேண்டியிருந்த உயர்ந்த விலைகள்.

செலமதி நிலுவைக் கொள்கை

சென்மதி நிலுவைக் குறைகளை நிதியீட்டுவதற்குப் போதியளவு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் கிடைக்கக்கூடியதாகவிருந்ததால் 1957—1960 காலப்பகுதிகளிலேற்பட்ட சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குக் குறைகள் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது அதிக பழுவை ஏற்றவில்லை. ஆனுல் இதுவரை கையாண்டு வந்த தாராள வர்த்தக கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாதென்பது 1960ல் தெரியவந்தது. ஏற்றுமதி வருவாய்களுக்கு மிக மேலாக இறக்குமதிக் கொடுப்பனவுகள் செய்யவேண்டியிருந்ததால் 1956 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 11,940 இலட்சமாகவிருந்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1960ஆம் ஆண்டிறுதியில் ரூ. 4,570 இலட்சத்துக்கு வீழ்ச்சியுற்றன. இதனுல் சென்மதி நிலுவைக் கொள்கையொன்றினைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. இது பெரும்பாலும், 1968 மே தொடக்கம் 1970 ஒகத்து வரைக்கும் நடைமுறையிலிருந்த வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டக் காலப்பகுதி நீங்கலாக, இற்றைவரைக்கும் கடைப்பிடிக்கப்படும் அதிக வலுவுடைய இறக்குமதிச் செலாவணிக் கட்டுப்பாடுகளாகும். 1961—64 காலப்பகுதியில் இறுக்கமான கட்டுப்பாடுகள் கையாளப்பட்டபோதும் அதிக கவலையளிக்கா விதத்தில் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியுற்று வந்தன. இதனுல் 1961லும் 1962லும் பன்னுட்டு நாணய நிதியிலிருந்து எடுப்பனவுகள் செய்ய வேண்டியிருந்தது.

1960ல் மத்திய வங்கியினுல் கடைப்பிடிக்கப்பட்ட நாணய வகையிலான இறக்குமதிக் கட்டுப்பாடுகளைவிடச் சென்மதி நிலுவையைச் சீர்திருத்துவதற்குப் பின்னர் மேலும் நடவடிக்கைகளை மத்திய வங்கியெடுக்க வேண்டியிருந்தது. மத்திய வங்கி 1961 தொடக்கம் எல்லையொதுக்கு வீதங்களையும், 1965 தொடக்கம் தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் மீது உச்ச மட்டங்களையும் விதித்தது. 1959ஆம் ஆண்டின் $2\frac{1}{2}$ சதவீதத்துக்கும் தற்போதைய வீதமாகிய

6½ சதவீதத்துக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் நான்கு சமயங்களில் வங்கி வீதம் உயர்த்தப்பட்டது. அரசாங்க முறிகள் மீதான வீதத்தை அதிகரிக்கும்படி மத்திய வங்கி இடைவிடாது இடித்துக் கூறி வந்தது. இதற்கிணங்க முறி வீதம் 1959ன் 3½ சதவீதத்திலிருந்து தற்போதைய 9 சதவீதத்துக்கு உயர்த்தப்பட்டது. 1967ல் 20சதவீதத்தினுல் ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. 1968ல் வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழ்த் திட்டமும் அதற்கு ஒப்பான நாணய நடவடிக்கைகளும் புகுத்தப்பட்டன.

வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் அநேகமான கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணி மீதான மேலதிக வரியாக வழங்குகின்றது. இது சிலவகையான வருவாய்கள் மீது உச்சக் கட்டணங்களே வழங்குகின்றது. இத்திட்டத்தினது நோக்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஏற்றுமதிகளுக்கும், கட்புலனுகாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் பண ஊக்கத்தை அளிப்பதும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகள் மீதும் கட்புலனுகக் கொடுப்பனவுகள் மீதும் மேலதிக ரூபாச் செலவினைத் திணிப்பதுமாகும். 1968லும் 1969லும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள கணிசமான முதலீட்டப் பொருட்களேயும் மூலப் பொருட்களேயும் நோக்கும்போது நடைமுறையிலிருந்த கைத்தொழில்களின் உற்பத்தித் திறனை முற்றுகப் பயன்படுத்துவதற்கு வெ. செ. உ. சா. திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தடையற்ற இறக்குமதிச் சலுகை பயன்படுத்தப்பட்டுள்ளதெனத் தெரிய வருகின்றது. உயர்ந்த செலாவணி வீதம் வழங்கிய உந்தலினுல் கடந்த ஈராண்டுகளிற் சிறு ஏற்றுமதிகள் விரிவைக் காட்டியுள்ளன. ஆனுல் ஏற்றுமதித் தீர்வைகளின் அதிகரிப்பு வெ. செ. உ. சா. திட்டம் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கிய நன்மைகளேச் சிறிதளவு குறைத்துள்ளன. இவ்வேற்றுமதிகள் மெச்சத்தக்களவு அதிகரிப்பதற்கு, வழமையாகப் பலவாண்டுகள் எடுக்குமென்பதைக் கவனத்திலெடுக்கும்போது, இதுவரை காணப்பட்ட முன்னேற்றம் இத்திட்டத்தின் நன்மைகளுக்கொரு சான்றுகோலாக விளங்குகின்றது. வெ. செ. உ. சா. திட்டம் மற்றுமொரு துறையில் அதாவது சுற்றுலாத் துறையில் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களே அதிகரிக்க உதவியுள்ளது.

**வளத்தினது இடைவெளியினை நிதியீட்டல்**

1952 தொடக்கம் இலங்கை எவ்வாறு தனது வெளிநாட்டு வளத்தினது இடைவெளியினை நிதியீட்டியுள்ளதென்பதை அட்டவணை 1—8 காட்டுகின்றது. இடைவெளியினை நிரப்புவதற்கு இலங்கை எவ்வளவு தூரம் கூடுதலாக வெளிநாட்டு உதவியில் தங்கியிருந்ததென்பதையும் இது காட்டுகின்றது. முந்திய ஆண்டுகளில் முக்கியமாக 1957—1960 வரைக்குமான பகுதியில் வெளிநாட்டுப் பொறுப்புக்களேத் தீர்ப்பனவு செய்வதற்காக இலங்கை தனது வெளிநாட்டுச் சொத்துக்களேப் பயன்படுத்தி வந்தது. 1960 வரைக்குமான ஒவ்வோராண்டுப் பகுதியிலும் திட்ட உதவி ரூ. 230 இலட்சத்தை மிஞ்சவில்லே. (1954ஆம் ஆண்டினைத் தவிர). மேலும் வழங்கப்பட்ட மொத்த உதவியில் பெரும்பகுதி கொடைகளாக விளங்கிற்று. 1957ன் குறையை நிதியீட்டுவதற்கு இலங்கை தனது வெளிநாட்டுச் சொத்துக்களே மெச்சத்தக்களவு கையாண்டது. வளத்தினது இடைவெளியில் 1/5 பங்கு மட்டும் திட்ட உதவியினுலும், கொடைகளினுலும், வெளிநாட்டு மூலதனத்தில் உட்பாய்வினுலும் நிதியீட்டப்பட்டது. இந்நிலே 1960 வரை பெரும்பாலும் நிலவி வந்தது.

## அட்டவணை 1—8

### இலங்கையின் வெளிநாட்டு மூலவள இடைவெளியும் அதனை நிதியீட்டும் வழிகளும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1952 | 1953 | 1954 | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் (பொருட்களும் பணிகளும்) ... | 1,648 | 1,796 | 2,015 | 2,201 | 2,086 | 1,995 | 1,956 | 2,056 | 2,050 | 1,937 | 1,992 | 1,924 | 1,955 | 2,116 | 1,885 | 1,866 | 2,231 | 2,178 | 2,264 |
| 2. மொத்த இறக்குமதிக் கொடுப்பனவுகள் (பொருட்களும் பணிகளும்) ... | 2,107 | 1,958 | 1,733 | 1,895 | 2,032 | 2,217 | 2,164 | 2,309 | 2,323 | 2,072 | 2,173 | 2,135 | 2,192 | 2,121 | 2,237 | 2,200 | 2,615 | 3,021 | 2,732 |
| 3. மொத்த மூலதனக் கொடுப்பனவுகள் ... | 28 | 79 | 73 | 85 | 99 | 92 | 29 | 75 | 36 | 37 | 12 | 17 | 86 | 121 | 189 | 80 | 265 | 392 | 656 |
| 4. மொத்த நடைமுறை, மூலதனக் கொடுப்பனவுகள் ... | 2,135 | 2,037 | 1,806 | 1,980 | 2,131 | 2,309 | 2,193 | 2,384 | 2,359 | 2,109 | 2,185 | 2,152 | 2,278 | 2,242 | 2,426 | 2,280 | 2,880 | 3,413 | 3,388 |
| 5. வெளிநாட்டு மூலவள இடவெளி .. | - 487 | - 241 | + 209 | + 221 | - 45 | - 314 | - 237 | - 328 | - 309 | - 172 | - 193 | - 228 | - 323 | - 126 | - 541 | - 414 | - 649 | - 1,235 | - 1,124 |
| 6 குறைநிலையின் நிதியீட்டம் ... | | | | | | | | | | | | | | | | | | | |
| (அ) செயற்திட்ட உதவி ... | — | — | 70 | 8 | 6 | 23 | 22 | 16 | 20 | 19 | 40 | 82 | 78 | 77 | 76 | 34 | 40 | 89 | 36 |
| (ஆ) பண்ட உதவி ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 107 | 178 | 255 | 272 | 263 |
| (இ) கடன்கள் ... | 13 | 3 | 24 | 17 | 28 | 27 | 55 | 44 | 53 | 41 | 37 | 44 | 76 | 64 | 63 | 46 | 28 | 46 | 75 |
| (ஈ) தனியார் மூலதனம் ... | 53 | 9 | 15 | 6 | 40 | 21 | 25 | 18 | 14 | 19 | 10 | 9 | 7 | 2 | 6 | 17 | 9 | 9 | 10 |
| (உ) இருபுடை வர்த்தக நிலுவைகளின் மாற்றம் ... | — | — | — | — | — | — | — | — | — | 16 | - 14 | 39 | 19 | - 69 | 30 | 80 | 42 | 18 | - 75 |
| (ஊ) குறுந்தவணைக் கடன்கள் ... | 23 | — | — | — | — | — | 55 | 48 | — | 28 | 7 | 8 | 39 | 26 | 2 | 7 | 84 | 185 | 434 |
| (எ) வழங்குவோர் கடன்கள் ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 176 | 85 |
| (ஏ) வங்கிக் கடன்கள் ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 57 | — | 227 | 123 |
| (ஐ) ப நா. நி. எடுப்பனவுகள் ... | — | — | — | — | — | — | — | — | — | 54 | 54 | — | — | 110 | 144 | 123 | 213 | 77 | 57 |
| (ஒ) வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றம் (அதிகரிப்பு = -) (குறைவு = +) | 348 | 230 | - 288 | - 260 | - 25 | 236 | 60 | 199 | 193 | 10 | 28 | 42 | 111 | - 89 | 122 | - 131 | - 14 | 86 | - 26 |
| (ஓ) ஏனைய கடன்களும் கடன் வகைகளும் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 33 |
| (ஔ) சிறப்பு எடுப்பனவுகள் .. | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 78 |
| (ஃ) ஏனைய ... | — | 1 | 2 | — | — | — | 46 | — | — | 5 | — | 1 | 2 | 9 | 9 | 15 | 12 | 32 | 20 |
| பிழைகளும் தவிர்க்கப்பட்டவையும் ... | + 49 | - 2 | 28 | + 8 | - 3 | + 7 | - 26 | + 3 | + 30 | - 20 | + 31 | + 3 | - 6 | - 6 | - 18 | - 12 | - 22 | + 18 | + 11 |
| மொத்த நிதியீட்டம் ... | +487 | +241 | - 209 | - 221 | + 45 | +314 | +237 | + 328 | +309 | +172 | +193 | +228 | +323 | +126 | +541 | +414 | +649 | + 1,235 | +1,124 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

குறிப்பு : 1. 1959ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டுச் சொத்துக்கள் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள மாற்றங்களோடு, வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றம் ஒத்துள்ளது. 1959ஆம் ஆண்டுக்கு முன்னர் மேலேயுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளபடி வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றம் வெளிநாட்டுப் புத்தகங்கட்கேற்ப இருந்தது. ஏனெனில் நாணயப் பகுதியுடன் தொடர்புடைய சென்மதி நிலுவைப்புள்ளிவிவரம் தொடர்பாக வெளியிடப்பட்ட தரவுகள் வெளிநாட்டுப் பகுதிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தமையாலாகும்.

2. குறுந்தவணைக் கடன்கள் இறக்குமதிகள் தொடர்பான எல்லாத் தரவுகளும் 1968ஆம் ஆண்டு தொடக்கம் பதிவுசெய்யப்பட்டன. இத்திகதிக்கு முன்னைய எண் தொகைகள் கடன்கள் இறக்குமதிகள் பொறுப்புக்களின் தேறிய மாற்றத்தைமட்டும் குறிக்கும்; இவை முக்கியமாகப் பர்மாவின் அரிசி, அவுத்திரேலியாக் கோதுமை மா, இறக்குமதிகளை மட்டும் குறிக்கும்.

1957—1970 வரைக்குமான பகுதியில் வளத்தினது இடைவெளிகளின் அளவு குறிப்பிடத்தக்களவு அதிகரித்து வந்தமை முக்கியமானதொரு பண்பாகும். இதனில் பெரும்பகுதி உதவி வழங்கும் நாடுகள் அளித்து வந்த உறுதிகளின் அடிப்படையில் நிதியீட்டத் திட்டமிடப்பட்டது. 1952—1966 வரைக்குமான காலப்பகுதியில் 1966ன் ரூ. 5,410 இலட்சங்கொண்ட வளத்தின் இடைவெளியே மிகக் கூடியதாகும் இதற்கு முந்திய ஆண்டுகளில் மிகக் கூடிய தொகை (1952 நீங்கலாக) 1959ஆம் ஆண்டிலேற்பட்ட ரூ. 3,280 இலட்சமாகும். வெளிநாட்டு வளத்தினது இடைவெளி 1966ன் ரூ 5,410 இலட்சத்திலிருந்து 1968இல் ரூ. 6,490 இலட்சத்துக்கும், 1969இல் ரூ. 12,350 இலட்சத்துக்கும் அதிகரித்தது. 1970ல் வளத்தினது இடைவெளி ரூ. 11,240 இலட்சமாக விளங்கிற்று.

1961ஆம் ஆண்டு தொடக்கம் சென்மதி நிலுவை நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உறுதியான ஏற்பாடுகள் எடுக்கப்பட்டபோது குறை நிதியீட்டம் செய்யும் முறையிலும் கணிசமானளவு மாற்றம் ஏற்பட்டது. 1957-60 காலப்பகுதியிற் கடைப்பிடிக்கப்பட்டதுபோல வெளிநாட்டுச் சொத்துக்கள் பயன்படுத்தமுடியாமலிருந்தது. வேறு முறைகள் அதிகளவு கையாளப்பட்டது. 1961ல் முதன் முறையாக, அவ்வாண்டிலேற்பட்ட வெளிநாட்டுப் பண்டக் குறையின் ¼ பகுதியை நிதியீட்டுவதற்கு இலங்கை ப. நா. நி. யிலிருந்து எடுப்பனவு செய்தது. 1961-65 வரைக்குமான காலப்பகுதியில் 1961, 1962, 1965 ஆகிய ஒவ்வோராண்டுகளிலும் குறைகள் ப. நா. நிதியினுல் ஓரளவு நிதியீட்டப்பட்டிருக்க. திட்ட உதவி கொடைகள், தனியார் மூலதனம், குறுந்தவணைக் கொடுகடன்கள் ஆகிய வேறு முறைகளும் கையாளப்பட்டன. அதிகமான திட்ட உதவிக் கடன்களுக்கு மன்னிப்புக் காலப் பகுதியிருப்பதால் இம்முறை மூலமான குறையின் உடனடியான நிதியீட்ட மீளக் கொடுப்பனவுப் பிரச்சினையை உண்டுபண்ணவில்லை, மேற்கூறிய ஒவ்வோராண்டுகளிலும் ரூ. 370 இலட்சத்துக்கு மேலாக விளங்கிய கொடைகள் 1964ல் ரூ. 760 இலட்சமாக விளங்கின. இவை மீளக் கொடுப்பனவு செய்யப்படாதவையாகையால் இவை ஒரு பழுவாக அமையவில்லை. குறுந்தவணைக் கொடுகடன்கள் ரூ. 70 இலட்சத்திலிருந்து ரூ. 390 இலட்சம் வரையிலிருந்தன. இவைகளின் அளவு பெரிதாக இல்லாததாற் கொடுப்பனவுகளின் நிலைமீது அதிக தாக்கத்தை உண்டுபண்ணவில்லை. 1961-65 வரைக்குமான கொடுகடன்களில் மூன்று தொடக்கம் ஐந்தாண்டுக் காலப் பகுதியில் மீளக் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தவை முற்கூறப்பட்ட ப. நா. நிதி எடுப்பனவுகள் ரூ. 1,260 இலட்சம் வெளிநாட்டு வளத்தினது இடைவெளியில் ரூ. 1,100 இலட்சம் வரைக்குமானவற்றை நிதியீட்டின.

1966க்குப் 1970க்குமிடையில், இறக்குமதிகளை நிதியீட்டுவதற்காக வெளிநாடுகளிலிருந்து தொடர்ந்து கடன் பெறுவதன் மூலம் வர்த்தக மாற்று வீதங்களின் விளைவுகளை எதிர்கொள்வது, முக்கிய கொள்கையாக அமைந்தது. வர்த்தக மாற்று வீதம் சாதகமாகவிருந்திருந்தால் நாடு தனது அபிவிருத்தித் திட்டங்களிற் பெரும்பகுதியை வெளிநாட்டு உதவியில்லாமல் நிதியீட்ட முடிந்திருக்கும். இக்கொள்கை கணிசமானளவு வெளிநாட்டு கடன்பாட்டு அதிகரிப்பை உண்டுபண்ணியது. இதனுல் இலங்கை தொடர்ச்சியான பாதகமான வர்த்தக மாற்றுவீதத்தை மட்டுமன்றி சேகரிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்களிலிருந்துவரும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கவேண்டியிருந்தது.

1966ஆம் ஆண்டு தொடக்கம் வளத்தினது இடைவெளியை நிரப்புவதற்காகப் பல்வகையான முறைகள் கையாளப்பட்டன. முதன்முதலாக 1966ல் பண்ட உதவியும் பன்னுட்டு நாணய நிதி எடுப்பனவுக்கும் மொத்த வெளிநாட்டு இடைவெளியில் 45 சதவீதத்தை நிதியீட்டுவதற்கு உதவின. 1967ல் இவ்விரு விடயங்களும் வளத்தினது இடைவெளியில் 60 சதவீதத்துக்கு மேலானவற்றையும், 1968ல் இவை 70 சதவீதத்துக்கு மேலானவற்றையும், நிதியீட்டின. குறுந்தவணைக் கொடுகடன்களையும் ப. நா. நிதி எடுப்பனவுகளையுமொட்டிய பிரச்சினை யாதெனில் சிலவாண்டுகளுக்குள் இவை திருப்பிக் கொடுக்கப்படவேண்டுமென்பதாகும்.

*1969லும் 1970லும் வளத்தினது இடைவெளியினை நிரப்புவதற்கு வேறு பல மூலங்களும் பயன்படுத்தவேண்டியிருந்தது. முதன்முதலாக 1969ல் வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் வள இடைவெளியின் 1/5 பங்கினை நிதியீட்ட உதவின. இத்துடன் ப. நா. நிதி எடுப்பனவுகளும், வழங்குவோர் கொடுகடன்களும், குறுந்தவணைக் கொடுகடன்களும் இடைவெளியில் 2/5 பங்கினை நிதியீட்ட உதவிசெய்திருக்க, மீதி இடைவெளி பண்ட உதவியினுல் பெரும்பாலும் நிதியீட்டப்பட்டது. இதனுல் 1969ல், பண்ட உதவி, குறுந்தவணைக் கொடுகடன்கள், வழங்குவோர் கொடுகடன்கள், வங்கிக் கடன்பாடுகள் ஆகியன மொத்த இடைவெளியாகிய ரூ. 12,350 இலட்சத்தில் ரூ. 10,000 இலட்சத்தை நிதியீட்ட உதவின. 1970லும் வளத்தினது இடைவெளியை நிரப்புவதற்கு இதே குறைகள் கையாளப்பட்டன. இவ்வாண்டில் ஏற்பட்ட ஒரேயொரு வேறுபாடு யாதெனில் குறுந்தவணைக் கொடுகடன்கள் எக்காலத்துக்குமில்லாத ரூ. 4,300 இலட்சத்தையடைந்திருக்க, பண்ட உதவி ரூ. 2,630 இலட்சத்துக்கு உயர்வுற்றமையாகும்.*

*1960-1965 வரைக்கும் இறக்குமதிகளின் மொத்தச் செலவுகள் சராசரியாக ரூ. 21,500 இலட்சத்துக்குள்ளாகவிருந்தன (செலாவணிக் கட்டுப்பாடுகளின்படி). 1966லும் 1967லும் கூட ஏற்றுமதி வருவாய்களிற் கணிசமான வீழ்ச்சியேற்பட்டபோதும் இம்மட்டம் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனுல் 1968ல் ரூபா நியதிகளில் செலாவணி வருவாய்கள் அதிகரித்தபோதும், இறக்குமதிகளுக்காக வழங்கப்பட்ட செலாவணி மிகவும் அதிகமாகவிருந்தது. இறக்குமதிக் கொடுப்பனவுகள் 1967ன் ரூ. 22,000 இலட்சத்திலிருந்து 1968ல் ரூ. 26,150 இலட்சத்துக்கும் உயர்வுற்றன. இதேவேளையில் மூலதன மீளக் கொடுப்பனவுகள் 1967 ன் பின்பு கூர்மையாக அதிகரிக்கத் தொடங்கின. 1965 வரைக்குமான காலப்பகுதியில் முக்கியமாக 1965ல் மூலதன மீளக் கொடுப்பனவுகள் மிக உச்ச மட்டமாகிய ரூ. 1,210 இலட்சத்தைச் சென்றடைந்தன. 1970ல் மூலதனக் கொடுப்பனவுகள் ரூ. 6,560 இலட்சத்தைச் சென்றடைந்தன.*

**சென்மதி நிலுவைச் செயற்றிறன்**

இங்கு ஆராயப்பட்டுள்ள பிரச்சினைகள் இலங்கையில் அபிவிருத்திச் செயற்றிறனின் சில அடிப்படை மாற்றங்களுக்கான தேவையை எடுத்துக் காட்டுகின்றன. முதலாவது, உள்ளூர்த் தொழிலையும் ஏற்றுமதிகளையும் அதிகரிப்பதற்குக் காரணமாகவிருக்கும் முதலீட்டங்களுக்கான வெளிநாட்டு உதவியின் பயன்பாட்டினையொட்டியதாகும். பண்ட உதவி அல்லது உதவியிலிருந்து கிடைக்கப்பெறும் இறக்குமதிச் சேமிப்புக்கள் செயற்றிட்டங்களுக்காகப் பயன்படவேண்டும். இது சென்மதி நிலுவை மீது மிக விரைவான நன்மையான தாக்கத்தினை ஏற்படுத்தும். உணவுப் பொருட்களின் தயாரிப்பிற்கு, முக்கியமாக உப உணவுப் பொருட்களின் தயாரிப்பிற்கு முக்கிய கவனஞ் செலுத்த வேண்டுமென்பதையும் இது சுட்டிக் காட்டுகின்றது. ஏனெனில் இத்துறையிலேயே மிகக் குறுகிய காலத்தில் அதிக வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிக்கலாம். மேலும் கனிப்பொருள், இயற்கை வளங்களையொட்டிச் சரியான முறையிலமைக்கப்பட்ட அளவையை நடாத்தினுல், இது ஏற்றுமதிக்குக் கிடைக்கக்கூடிய ஏனைய பொருட்கள் அல்லது மூலப் பொருட்களை அல்லது தற்போது இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களில் தங்கியிருக்கும் உள்ளூர் கைத்தொழில்களுக்கு வேண்டிய உள்ளிடுகைகளையொட்டிய பொருட்களைப்பற்றிய தகவலை அளிக்கக்கூடும்.

வெளிநாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய கொடுகடன் ஒருவிதத்தில் பாதகமான விளைவினை உண்டுபண்ணியுள்ளது. அதாவது கையாளப்படும் கடுமையான செலவுச் சிக்கனங்களிலிருந்து இலங்கையின் பொருளாதாரத்தை இது விடுவித்துள்ளது. கொடுகடன் கிடைக்கப் பெருவிடின் சென்மதி நிலுவைகளினுல் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கேற்ப இலங்கைப் பொருளாதாரம் சீராக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும். இறக்குமதிகள் தொடர்ந்து கிடைக்கக்கூடியதாகவிருந்தமை, நாட்டின் சென்மதி நிலுவையின்

கவலைக்கிடமான நிலையினை மறைத்துள்ளதுமட்டுமன்றி, தனியார் துறையின தும் அரசாங்கத்தினதும் செலவிற் கையாளப்படவேண்டிய இறுக்கத்தின் தேவையையும் ஓரளவு மறைத்துள்ளது. அடிப்படைத் தேவைப் பொருட்கள் உட்பட மொத்த நுகர்ச்சி மட்டத்திற் குறைவினை உண்டுபண்ணுதல் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய முக்கிய பண்பாகும்.

தனியார் துறைக்கான கொடுகடனிற் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதும், அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் பெரிதாக வளர்ந்து செல்லும் குறைகளை விரிவுத் தாக்கமுள்ள முறைகளினல் நிதியீட்டுவதன் மூலமே இலங்கை அதிகளவில் வளர்ந்து செல்லும் இறக்குமதிகளுக்கான கேள்வியைத் தொடர்ந்து வைத்திருக்க முடிந்தது. அண்மையாண்டுகளில் வரவுசெலவுத்திட்டத்தின் ஆண்டுப்படியான விரிவுத் தாக்க முறையினல் நிதியீட்டப்படும் இடைவெளி ரூ. 4,000 இலட்சத்தை மிஞ்சியுள்ளது. சென்மதி நிலுவைமீது கடுமையான பாதிப்பினை உண்டுபண்ணுமல் இவ்விரிவுத்தாக்க இடைவெளியினைத் தொடர்ந்து கொண்டு செல்லமுடியாது. ஆனல் இத்தகைய கடுமையான பாதிப்பினை நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளும், வெளிநாட்டுக் கடன்பாட்டினையும் இனிமேலும் தாங்கமுடியாது. ஆகையால் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் மூலதனச் செலவின் ஒரு பகுதியை நிதியீட்டுவதற்கு நடைமுறைக் கணக்கில் மிகையை உண்டுபண்ணி வரவுசெலவுத்திட்டத்தை ஒரு நியாயமான நிலுவையில் வைத்திருத்தல், சென்மதி நிலுவையின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முக்கிய அடிப்படை முறையாக அமைகின்றது. 1970/71 வரவுசெலவுத்திட்டத்தின் விரிவுத்தாக்கமுள்ள நிதியீட்ட முறையினை மதிப்பிடப்பட்ட மட்டத்தில் வைத்திருக்க முடியுமானல் இது சென்மதி நிலுவைக்கு மிக்க உதவியாக அமையும்.

வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்புக்களை உண்டுபண்ணுவதற்கு இதுவரை இறக்குமதிப் பதிலீட்டு முறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆனல் இதன் விளைவு எதிர்பார்க்கப்பட்டபடி அமையவில்லை. கைத்தொழிற் பொருட்களைப் பொறுத்தவரை இலங்கை தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களில் அதிகளவு தங்கிவருகின்றது. புதுக் கைத்தொழில்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள் படிப்படியாக உயர்ந்து வந்து அவை இப்போது ஆண்டுக்கு ரூ 5,000 இலட்சமாக அமைந்துள்ளன. இலங்கையில் தயாரிக்கப்பட்ட கைத்தொழில்களில், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் பங்கு 75 சதவீதமாக அமைந்துள்ளதென்பதை அட்டவணை II (ஆ) 6லுள்ள தரவுகள் காட்டுகின்றன. ஆக்க உரிமை வாடகைகள், தொழிலுக்குரிய சேவைகள் மீதான கட்டணங்கள், வெளிநாட்டுப் பங்குடைமைகளையொட்டிய பங்குலாபங்கள் ஆகியவற்றையும் கணக்கிலெடுக்கும் போது சில கைத்தொழில்கள் சென்மதி நிலுவைகள்மீது எதிர்மாறன விளைவைக் கொண்டுவரக்கூடும். ஆகையால் புதுக் கைத்தொழில்கள் படிப்படியாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மீது குறைந்தளவு தங்கியிருப்பதற்கு வேண்டிய, சீராக்கம் செய்யும்பொருட்டு கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியில் 10 சதவீதத்துக்கு வகைகூறுவதும், மிகக் குறைந்த செலாவணி வருவாயை அல்லது முற்றிலும் ஒன்றினையும் பெருததும், சிறு சேமிப்பையே உண்டுபண்ணுவதுமான ஒரு துறைக்கு நாட்டின் மொத்தச் செலாவணி வருவாய்களில் நாலிலொரு பங்கினை வழங்குவது சமூக அடிப்படையில் நியாயமற்றதாகும்.

விவசாயத்தைப் பொறுத்தமட்டில், இறக்குமதிப் பதிலீடு சென்மதி நிலுவைமீது சாதகமான விளைவினை உண்டுபண்ணியுள்ளது, எனினும், விவசாயத்தில் இதுவரை பெற்ற வளர்ச்சி வீதம் மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தோடு ஒப்பிடும்போது பற்ருமற் காணப்பட்டது. இதன் விளைவால் விவசாய இறக்குமதிகளிற் கணிசமானளவு குறைப்பினை ஏற்படுத்த முடியவில்லை. 1970லும், உணவினதும் குடிபானங்களினதும் இறக்குமதிகள் மொத்த இறக்குமதிகளில் ரூ 10,510 இலட்சம் அல்லது 46 சதவீதமாக விளங்கின (சுங்கத் தரவுகள்).

மொத்த இறக்குமதித் தொகையில் நுகர்ச்சிப் பொருள் இறக்குமதிகள் அதிகமாக விளங்குகின்றன, பெறுமதிகளைப் பொறுத்தவரை 1970ல் இவை மொத்த இறக்குமதிகளில் 56 சதவீதமாக விளங்கின. 1969ஆம் ஆண்டுக்கான தொடர்பான எண்தொகைகள் 48 சதவீதமாகும். இதற்குக் காரணம் மக்கள் தொகை அதிகரித்தனால் மட்டுமன்றி தனியாளுக்கான வருமானமும், நுகர்ச்சியும் அதிகரித்து வந்தமையினாலாகும். முதலீட்டத்துக்குப் பதிலாக நுகர்ச்சி அதிகரித்துச் செல்லுமாயின் இது மொத்தப் பொருளாதார வளர்ச்சி வீதத்திற் பாதகமான விளைவுகளை உண்டுபண்ணும். மேலும் உயர்ந்த மட்ட வேலை நிலையை வைத்திருக்கக் கூடிய பொருளாதாரத்தின் ஆற்றலும் பாதிக்கப்படும். இந்நிலையில் பொருளாதாரம் தாங்கக்கூடிய அளவுக்கு நுகர்ச்சியைக் குறைத்துத் திருத்திகரமான வளர்ச்சி வீதத்தைக் கடைப்பிடிப்பதற்காக உயர்ந்தளவு முதலீட்டத்துக்குக் கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகின்றது. இதனைப் பெறுவதற்கு நுகர்ச்சி மீதான செலவுகள் மானியங்கள், அரசாங்க முயற்சிகளால் வழங்கப்படும் பொதுச் சேவைகளுக்கான நியாயமான விலைகள் ஆதியன உடனடியாக மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

இறக்குமதிகளின் குறைப்புக்கு மாற்றாக அமையக்கூடிய நடவடிக்கை ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பது அல்லது அதிக வெளிநாட்டு உதவி பெறுதல் அல்லது அதிகப்படியான இறக்குமதிப் பதிலீடுகளை உண்டுபண்ணுதல் என்பதாகும். வழமையான ஏற்றுமதிகளிலிருந்து பெறப்படும் வருவாய்களை உடனடியாகக் கணிசமானளவில் அதிகரிப்பதற்கு இடமில்லையென்பதை அங்காடிப் போக்குகள் எடுத்துக்காட்டுகின்றன. தெங்கினைப் பொறுத்தவரை மேலுமொரு பிரச்சினை இருக்கின்றது. அதாவது, உள்ளூர் நுகர்ச்சி அதிகரிப்பதற்கு மேலாக உற்பத்தியதிகரித்தாலன்றி, உள்ளூர் நுகர்ச்சி அதிகரிப்பு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்குக் கிடைக்கக்கூடிய அளவினைப் பாதிக்கக்கூடும். மூன்று முக்கிய ஏற்றுமதிகளையுமொட்டி நிலைமை தெளிவாகவில்லாததால் ஏற்றுமதி முயற்சியானது புதிய பொருட்களை அபிவிருத்தி செய்வதிற் செலுத்தப்படல் வேண்டும். இத்துறையில் நியாயமானளவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் தேயிலை, இரப்பர் அல்லது தெங்கு தனியாக வழங்கும் வருவாய்ப் பெறுமதியளவுக்கு எந்தவொரு புதிய ஏற்றுமதியோ, ஏற்றுமதித் தொகுதிகளோ அபிவிருத்தியடையவில்லை. கணிசமான மேலதிக வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை ஏற்படுத்தும் முறையில் சில பொருட்களில் ஏற்றுமதி வணிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒருங்கிய முயற்சி மிக இன்றியமையாததாகும்.

வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழின் கீழ்த் தூண்டுதல்கள் அளிக்கப்பட்டும், சென்ற காலத்தில் இரத்தினக் கற்களின் ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்கதாய் அமையவில்லை. இந்தநாட்டிற்குப் பெரும் வளங்களை இந்த ஏற்றுமதி கொண்டுவரலாம். சுற்றுலாத் தொழிலையும்; உத்தேசித்த இரத்தினக் கூட்டுத்தாபனத்தையும் ஊக்குவிப்பதற்கு எடுக்கப்படும் சிறந்த முயற்சிகள் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குத் துணை செய்யக்கூடும்.

இதற்குரிய வேறு வழி மேலும் உதவியைப் பெறுவதேயாகும். வெளிநாட்டு உதவி தனியே நன்கொடையாக அமையின் எதுவித சிக்கலுமில்லை. ஆனால் அட்டவணை 1—8 காட்டுவதற்கு அமைய இந்த நன்கொடைக்கூறு சிறிதாய் விளங்குவதோடு வழங்கப்பட்ட உதவி, வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய கடன்களாகவும் அமைந்துள்ளன. இன்று தோன்றியுள்ள சென்மதி நிலுவை நிலையின் அடிப்படையில் பார்க்கையில், விரிவான அடிப்படையில் மேலும் குறுகிய கால கொடுகடனைப் பயன்படுத்துதல் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. இன்று இலங்கையை எதிர்நோக்கும் சென்மதி நிலுவைப் பிரச்சினை தற்காலிகமானதோ அன்றிக் காலத்திற்குக்காலம் எழும் தன்மையுடையதோ அல்ல. காரணம் மாற்றங்களின் விளைவால் இயற்கை அமைப்பிலேயே இவை ஒன்றிவிட்டதனால், நாம் எதிர்பார்க்கக்கூடியளவு வருங்காலத்தில் மாற்றமடையக் கூடியதாகவில்லை.

இலங்கையின் சென்மதி நிலுவைகளின் அடிப்படைச் சமமின்மைக்குக் காரணம் கிடைக்கத்தக்க வளங்களுக்கு மேலாகச் செலவு அதிகரித்ததன் விளைவேயாகும். இப்பிரச்சினைக்குரிய மாற்றுமருந்தை எளிதிற் கூறலாம்; ஆனால் செயற்படுத்த முடியாது. இதற்குரிய தீர்வு, குறைத்துச் செலவு செய்வதேயாகும்; அல்லது அதையே வேறு சொற்களில் சொல்லின் கூடச் சேமிப்பதேயாகும். கிடைக்கத்தக்க வேலையாற்றலை உள்ளடக்கும் முறையில் அபிவிருத்தித் திட்டத்தினைப் பாதுகாப்பதற்கு இலங்கையில் நடைமுறை வீதச் சேமிப்புகள் போதியதாக அமையவில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டின் மேலதிகச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்தக் கட்டுப்பாடு நடைமுறை நுகர்ச்சியிலேற்படவேண்டுமேயன்றி முதலீட்டிலல்ல. காரணம், வேலையில்லாப் பிரச்சினைக்குக் கூடிய வீத முதலீடு ஏற்ற தீர்வாய் அமைவதோடு பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் விளைவு வளர்ச்சிக்குத் துணை நிற்பதோடும் இந்த உயர்ந்த வீத முதலீடு உயர்ந்த வாழ்க்கைச் செலவு, சென்மதி நிலுவைகளின் ஒத்த நிலையின்மை ஆகிய இன்றைய சிக்கல்களுக்கும் நிலையான தீர்வாக அமையும்.

மேற்கூறிய கருத்துக்கள் இந்நாட்டை எதிர்நோக்கும் சென்மதி நிலுவைகளுக்கு விரைந்த தீர்வுகளில்லையென்பதையே தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது. கிடைக்கத்தக்க ஒவ்வொரு வாய்ப்பிற்கும் பிரச்சினைகளும், எல்லைகளும் இருப்பதினால் ஒரே நேரத்தில் பல துறைகளில் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே நிலையான தன்மையில் சென்மதி நிலுவைகளை வைத்திருக்க வேண்டின் பெருமளவு நீண்ட காலத்திற்கு ஒன்றுபட்ட நாட்டின் முயற்சி தேவைப்படுகின்றது.